11

# ஜகன்மோகினி

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்.




JL
ஜ211, M122514
1944·21·2
183088

...NI", SINGAPERUMALKOIL.

பிப்ரவரி 1944.

4 ANNAS

ILLUSTRATED TAMIL MON...

# புதிர்

**எது?—**

- ★ ஏற்றத் தாழ்வு இல்லாதது.
- ★ என்றுமே மதிப்பில் குறையா
- ★ வருஷாந்திர அதிகரிப்பு உடை
- ★ வருஷத்திற்கு வருஷம் வளர் வந்து, பயத்தினின்றும், தே யினின்றும் காப்பாற்றுகிறது.

**பதில்—**

**"நேஷனல் ஸேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள்"தான்.**

(எல்லா போஸ்டாபீசுகளிலும், அல்லது ஜில்லா அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.)

---

<u>மலருக்கேற்பட்ட மகத்துவம்</u>

## இனி பலர் "இமிடேட்" செய்வார்கள்.

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்

"......உங்கள் பொங்கல் மலரைப் பார்த்து மிக மிக மகிழ்ச்சி அடைந்தேன்......மலர் மிகவும் நன்ருக இருக்கிறது. பார்வை, அளவு, கடுதாசிகளின் விவித சேகரிப்பு, விஷயங்கள்—எல்லாமே,...என் மனதைக் கவர்ந்தது......உங்கள் மலரின் அகலம், நீட்டம் இனிமேல் பலர் "இமிடேட்" செய்வார்கள்..."

---

## அமுதை ஊட்டுகிருர்கள்.

திவான் பகதூர். வி. பாஷ்யமய்யங்கார்

**வைத்தமாநிதி** (யாம் மது சூதனன்) **மோகினியாய்** தேவர்க்குக் கடலமுதம் ஊட்டினனும், அன்று. இதையும் கேட்டதுண்டே தவிரக் கண்டதில்லை.

**வைத்தமாநிதியார் ஜகன்மோகினியால்** பக்ஷபாதமில்லாமல் உலகமுழுதிற்கும் கோதற்றக் கலை ...தை ஊட்டுகிருர்கள், இன்று. இது பிரத்யக்ஷம்.

ஸ்ரீராமஜயம்.

சுபானு௵ தைமீ

பிப்ரவரி 1944

மலர் 21 இதழ் 2

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி

JAGANMOHINI

Vol. 21 No. 2. Feb. 1944.

18308

# கணவனைத் திருத்திய மனைவி

ஏ. ஸ்ரீ

'அன்னன் கோயில் என்று வழங்கும் திருவெள்ளக்குளம் ஸ்ரீவைஷ்ணவ க்ஷேத்திரங்களில் ஒன்று. அந்தக் கோயிலே ஸ்ரீவைஷ்ணவத்தின் முக்கியமான வளர்ப்புப் பண்ணைகளில் ஒன்று என்று சொல்லலாம்.

அந்தக் கோயிலில் ஒரு சமயம் நடனம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த நடனத்தைப் பார்த்தவர்களெல்லாம், "ஆஹா! நடன சரஸ்வதியே இப்படிவந்து.. இல்லை, பக்திக் காதலே ஒரு பெண்ணுருவம் கொண்டு பகவான் முன்பு இப்படி ஆடிப் பாடித் தன்னை அர்ப்பணம் செய்துகொள்வதுபோலிருக்கிறது!" என்று அதிசயித்தவண்ணமாயிருந்தார்கள். ஆனல் தகுதியான கணவருக்குத் தன்னை அர்ப்பணம் செய்ய வேணும்; அவர் மூலமாக ஸ்ரீவைஷ்ணவத் தொண்டு நடைபெறவேணும்— என்பதுதான் நடிகையின் அந்தரங்கமான பிரார்த்தனை.

நீல மலர்போன்ற கண்களில் இதயபாவம் நீலக்கடல்போல் அலைவீச, அல்லி மலர்போன்ற கைகளும் விரல்களும்,—ஏன்? உடம்பு முழுதுமே—சலனங்களாலும் பாவங்களாலும் பக்தி பரவசத்தாலும் பேசத் தொடங்கிய அதிசயத்தை, வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தார், அந்தக் கூட்டத்தில் இருந்த மகாரஸிகரான சிற்றரசர் ஒருவரும்.

## உள்ளத்தைப் பறிகொடுத்தார்

முதல் முதல் நடிகையை மறந்து நடனத்தையே பார்த்துக்கொண்டிருந்தவர், அபிநயம் என்ற அந்தத் தெய்விக் பாஷையால் அப்படியே வசீகரிக்கப்பட்டார். நடனம் முடிந்ததும் நடிகையையும் கவனித்தார்; அந்த ரூப சௌந்தரியத்திலும் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டார்.

நடிகையும் தன் இதயத்தைக் களவுபோகாமல் காப்பாற்றிக் கொண்டாள் என்று சொல்லமுடியாது. அவளும் அந்த ரஸிக சிகாமணியை இடையிடையே கவனித்துவந்தாள். "என்ன ரஸானுபவம்! இப்பேர்ப்பட்ட ரஸிகர்களால்தானே ஆடல் பாடல்கள் அபிவிர்த்தி அடைய வேணும்?" என்று முதல்முதல் எண்ணினள். பிறகு பெருமூச்சுவிட்டு, "இவர் பக்தராகவும் இருந்துவிட்டால்..." என்றெல்லாம் நினைத்துக் கொண்டாள். அவரைக் கடைசியாக ஒரு பார்வை பார்த்துப் புன்னகை

செய்து போய்விட்டாள். ‘அந்தப் புன்னகை ஒளிகாட்டி வழிகாட்டாவிட்டால், இனி என் வாழ்க்கையே இருண்டுபோகும்!’’ என்று எண்ணினார் அரசர்.

‘‘தேவலோகத்து அப்ஸரஸ் தான் இவள்!’’ என்று சொல்லும்படியிருந்த அந்தப் பெண்மணியைக் குறித்துச் சிற்றரசர் விசாரித்துப் பார்க்கையில், அவள் ஒரு வைஷ்ணவ வைத்தியருடைய ஸ்வீகாரப் பெண் என்று முதல் செய்தி கிடைத்தது. அரசர் தாமே அந்த வைத்தியரை நேரில்போய்ப் பார்த்து அந்த ஸ்வீகார புத்திரியைத் தமக்குத் தாரை வார்த்துக் கொடுக்கவேணுமென்று வேண்டிக்கொண்டார். அவளாலும் அவரை மறக்கமுடியவில்லை. எனினும் அவர் வைஷ்ணவராக இல்லையே என்ற ஒரே காரணத்தினால் வாழ்க்கைப்படச் சம்மதிக்கவில்லை.



‘‘அந்தக் கடைக்கண் பணியினால் எதுவும் செய்யமுடியும்!’’ என்று தீர்மானித்த அரசர் ‘‘வைஷ்ணவராவோம்’’ என்று தீர்மானித்துவிட்டார். பன்னிரண்டு திருமண்காப்புகளும் பரிஷ்காரமாய் அணிந்துகொண்டு விரைந்து வந்தார். அந்தப் பெண்மணியோ, ‘‘பாகவத கைங்கரியமல்லவா ஸாரமான ஸ்ரீ வைஷ்ணவ தர்மம்?’’ என்று வற்புறுத்தி, ‘‘நீர் நித்தியமாக ஏழைகளான ஆயிரத்தெட்டுப் பாகவதர்களை ஒரு வருஷமாவது ஆராதித்து அமுது செய்வித்து வரவேணும்’’ என்று நியமம் கூறினாள். அந்த விரதத்தைச் செய்து முடிப்பதற்கும் அவர் உடன்படவே, திருமணம் இனிது நிறைவேறியது.

### வழிப்பறி செய்தார்!

பின்பு சிற்றரசர் தாம் வாக்களித்திருந்தபடி பாகவத கைங்கரியத்தில் தம்மை இழந்துவிட்டார். பொருளையெல்லாம் இழந்த பிறகும், பணக்காரர்களை வழிப்பறி செய்தாகிலும் பாகவத கைங்கரியத்தைத் தொடர்ந்து நடத்த விரும்பினார். நீர்மேல் நடப்பான், நிழலில் ஒதுங்குவான், தாள் ஊதுவான், தோலாவழக்கன் என்ற நிபுணர்களான துணைவர்களோடு தாமே கொள்ளையடிக்கப் புறப்பட்டாராம். பகல் - ராஜா ‘ராத்திரி ராஜா’வாகவும் பரிணமித்துவிட்டார்!

எத்தனையோ கொள்ளைகளுக்குப் பின், ஒருநாள் இரவில் நல்ல நிலா. காட்டு வழியிலே ஒரு புது மாப்பிள்ளை கல்யாணமானதும் தன்னுடைய மணவாட்டியோடு வந்துகொண்டிருந்தான். ‘‘ஆஹா, என்ன அழகு!



என்ன செல்வம்!" என்று ஆச்சரியப்பட்டார் அரச மரத்தின் கீழே பதுங்கியிருந்த அரசர். எனினும் தனது மனைவியின் நியமமும் பாகவத கைங்கரியமும் ஞாபகத்திற்கு வர, இவர் தம் பரிவாரத்துடன் அவர்களை வளைந்துகொண்டு தயை தாட்சணியம் பாராமல் ஆபரணங்களையெல்லாம் அபகரித்துக்கொண்டார். மாப்பிள்ளையின் காலாழியை அபகரிக்க விரும்பி அதைக் கழற்ற முடியாமையால் பல்லால் கடித்துப் பறித்துக்கொண்டார். ஆஹா! அந்த அடிகளின் அழகையும் மென்மையையும்தான் என்னென்பது?

## கள்ளன் யார்?

அப்பால் அந்தப் பொருள்களையெல்லாம் மூட்டையாகக் கட்டி, எடுக்க முயன்றார். "நம்மாலும் எடுக்க முடியாத அவ்வளவு பெரிய மூட்டையா?" என்று முழுப் பலத்தோடும் தூக்கப் பார்த்தார். அது அசைவதாகவே காணப்படவில்லை. "நீ என்ன மந்திரவாதம் பண்ணிவிட்டாய்? பிராமணா!" என்று அரசர் மாப்பிள்ளையை நெருங்கிப் பயமுறுத்தியதும் அந்த மாப்பிள்ளை, "வாரும் ஐயா, கள்வர் திலகமே! அந்த மந்திரத்தை உமக்குச் சொல்லிவிட்டு மறுஜோலி பார்க்கிறோம்: அதற்குத்தானே இவ்வளவு அவசரமாய்ப் புறப்பட்டு வந்தோம்!" என்று கழுத்தைக் கட்டிக்கொண்டு காதில் ஏதோ சொல்லிவிட்டானாம்.

அந்த ஒரு சொல்,—ஏன்? அந்த மோகனமான குரலே—அதற்கு முன் அந்த மாப்பிள்ளையிடம் தாம் கொள்ளையடித்த செல்வங்களுக்கெல்லாம் எவ்வளவோ மேலான கொள்ளையாகத் தோன்றியது அந்த அரசருக்கு! அதே சமயத்தில் அவனும் தன்னிடமிருந்து ஏதோ கொள்ளையடித்துக் கொண்டதாகத் தோன்றியது.

**தம்மையே பறிகொடுத்தார்!**

மாப்பிள்ளை—என்ன ஆச்சரியம்!—'கள்ளனுக்குள்ளே குள்ளன்' என்பதுபோல் எங்கேயோ பாய்ந்து எப்படியோ மறைந்துபோய்விட்டான். மணவாட்டியும் அப்படியே மறைந்துபோனாள். அரசர் அங்கும் இங்கும் எங்கும் தேடினார். நாலு திசைகளிலும் பார்த்துவிட்டு ஆகாசத்தையும் பார்த்தார். தம்மை அறியாமலே. ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியம்! ஆகாச வீதியில் ஒரு பொன்மலை மிதக்கிறது; அந்த மலைமீது ஒரு நீலமேகம் உலாவுகிறது மின்னலும் தானுமாய்!

அருள்வடிவமான மகாலட்சுமியோடு காட்சி கொடுத்துவிட்டான், கருடாருடனாய். ஆஹா, சிறிதுநேரத்திற்குமுன் மணவாளக் கோலமாக வந்து தம்மால் கொள்ளையடிக்கப்பட்ட அவன்தான் இப்போது வான வீதியில் அழகிய மணவாளனான ஸர்வேச்வரனாகக் காட்சிகொடுத்து, இவரையே கொள்ளை கொள்ளுகிறான்!

"அந்தோ, என்ன காரியம் செய்துவிட்டேன்! உன்னையும் கொள்ளையடிக்கத் துணிந்தேனே! உன்தேவியையும் வழிப்பறிசெய்தேனே!" என்று கதறினார் அரசர் "நம்மைக்கொள்ளைகொள்ள வருவாருண்டோ?—என்று தானே தேடிக்கொண்டிருக்கிறோம்?" என்றான் அழகிய மணவாளன். "என் வாயால் எச்சிலாக்கிவிட்டேனே அந்தப் பொன்மலர்களான திருவடிகளை!" என்று கதறினார் அவர். "என்னையும் எச்சிலாக்கமுடியுமா? தீட்டுப் படுத்தமுடியுமா?" என்றான் அவன்.

"என்ன மோகனமான–புல்லாங்குழல் இசைப்பது போன்ற—குரல்!" என்று அதிசயித்துக்கொண்டிருக்கும்போதே, அந்த மோகனஸ்வரூபம் பேசிக்கொண்டிருந்தது:—"அஞ்சவேண்டாம்: நாம் உம்மை விளையாட்டுக் கொண்டோம். குழந்தை சொல்லும் மழலைச்சொற்களைக் கேட்பதற்கு ஆசைப்படும் தாய்போல உம்முடைய பாடல்களைக் கேட்க ஆசைப்படுகிறோம். பா மணக்கும் அந்த வாயால் நமக்குப் பாமாலை சூட்டுவீர்! நம்மை உமக்கு உறவாக்கிய உம்முடைய காதலியோடு உலகம் உய்யப் பணி செய்யவேணும். முக்கியமாக உமது பாடல்-தொண்டினால், நாடு உய்ய வேணும்; தமிழ் மொழியும் நாமும் புகழ் பெறவேணும்! பாகவதர்களுடைய உடற்பசிக்கு உணவு கொடுக்கும் நீர் மக்களுடைய இதயப் பசிக்கும் அமிர்தம் வழங்குவீர்! நல்லது, போய்வாரும்."

அப்போது பிறந்த முதலாவது பாட்டு, மனித வர்க்கத்தின் துயரங்களையெல்லாம் அள்ளி, பகவானுடைய திருச்செவியிலே போட்டுவிட முயல்வதுபோல்,

> "வாடினேன், வாடிவருந்தினேன் மனத்தால்,
> பெருந்துயர் இடும்பையில் பிறந்து"

[இடும்பை - தீமை; அச்சம்.]

என்று ஆரம்பமாகிறது.

இந்தச் சிற்றரசர்தான் திருமங்கை மன்னர் என்ற திருமங்கை ஆழ்வார். இவரது காதலிக்குக் குமுதவல்லி என்று பெயர். கணவரைத் திருத்திப் பக்திக் காதலராக்கிய இந்த அம்மையாரின் பெயரையும் வைஷ்ணவ உலகம் மறக்கமுடியுமா? திருமங்கையாரை வாழ்த்தும் வைஷ்ணவ ஆசாரியர்கள் இந்த ஆழ்வாரைக் "குமுதவல்லி மணவாளன்" என்று குறிப்பிடுகிறார்கள்.

# ஆசை அலங்காரம்

நவராத்திரியின்போது தனது குழந்தையை தினுசு தினுசாக அலங்கரிக்க ஒவ்வொரு பெண்மணியும் ஆசைப்படுகிறாள். "நான்தான் ஜின்னா சாகிப்" என்கிறான் சிறுவன்! "ஜப்பான் குண்டுக்குப் பயந்து ஓடிவந்த பர்மியப்பெண்ணல்ல; பஞ்ஜாபிய நாட்டியக்காரியுமல்ல; கலாசாலையில் படிக்கவந்த கூர்க்க அல்லது வட இந்தியப் பெண்ணுமல்ல நான்" என்கிறாள் இச்சிறுமி.



இந்த மாதம் நாம் கொண்டாடுவது மகா சிவராத்திரி




சிவபெருமான் விஷத்தை உண்டு மகத்தான தியாகம் செய்ததைக்குறித்து ஸ்ரீராமனே எடுத்துச்சொல்லியதாக கம்பர் யுத்தகாண்டத்தில், விபீஷணன் அடைக்கலப்படலத்தில் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்:-

இடைந்தவர்க்(கு), அபயம் யாமென்(று) இரந்தவர்க்(கு), எறிநீர் வேலை
கடைந்தவர்க்(கு) ஆகி, ஆலம் உண்டவன் கண்டிலீரோ?
உடைந்தவர்க்(கு) உதவானாயின், உள்ளதொன்று ஈயானாயின்,
அடைந்தவர்க்(கு) அருளானாயின், அறமென்னும், ஆண்மையென்னும்?

ஸ்ரீ: சுவாமி சுத்தானந்த பாரதியார்

# கண்ணனே கவி



வீர விளக்கு வ. வே. சு. ஐயரை, தமிழர் மறந்திருக்கமாட்டார்கள். தமிழ்நாட்டில் குருகோவிந்த சிங்கர்களை வளர்க்க நாங்கள் குருகுலம் நடத்தினோம்....அதில் இப்போது கோழிக் குஞ்சுகளை வளர்க்கிறார்கள். அகாலி வீரர்போலத் தமிழ் ஜாதியைத் தலை நிமிர்ந்த தீரஜாதியாக்க முயன்றோம்... அந்த இடத்தில் நாங்கள் நாட்டிய ஸ்தாபனங்கள் புல் முளைத்துப்போயின. அங்கே காந்தி புண்ணியத்தால் ஒரு ஹரிஜன் சாப்பாட்டு விடுதிமட்டும் இருக்கிறது. அது பாரத்வாஜ ஆசிரமத்தின் பெயரைத் தாங்கி நிற்கிறது. போகட்டும்; ஐயரின் கோத்திரமாவது விளங்குகிறதே!

வடநாட்டில் ஒரு காங்கிரியும் சாந்திநிகேதனமும் எழுந்தால், இலட்ச லட்சமாகத்தந்து ஆதரிக்கிறார்கள். தமிழர் தலைவிதி இப்படி சமையற் பானையில் முடிந்தது. அன்று வீறு பெற்ற பிரமசாரிகளுடன் இன்பச் சித்திரமாக விளங்கிய குருகுலம், இன்று சோர்வுற்ற சோகச் சித்திரமாக விளங்குகிறது. ஆனால் சோகமும் நவரசங்களில் ஒன்றுதானே. குடலை நடுக்கும் ஷேக்ஸ்பியரின் மாக்பெத்திலும் நடையழகும் பொருளழகும் நமது உள்ளத்தை அள்ளவில்லையா? அதுபோல் குருகுலச்சோக நாடகத்திலும் சில நவரசக்காட்சிகள் என்முன் நிற்கின்றன. அவற்றுள் எனது கவிதை சம்பந்தமான சிலவற்றையே சந்தர்ப்பத்திற் கேற்றபடி மோகினி வாசகருக்குத் தருகிறேன். கவிதைக்கலையின் புனித வடிவை விளக்குவதே இக் கட்டுரைகளின் நோக்கம்.

* * * *

நான் அடிக்கடி, குருகுல பிரமசாரிகளைக் கால்நடையாகவே பல ஊர்களுக்கும் இயற்கைக் காட்சிகளுக்கும் அழைத்துச் சென்றதுண்டு.

இயற்கையழகு, நல்ல திவ்யக்ஷேத்திரங்கள் இரண்டையும் கண்டால் எனக்குக் கவிதை மலரும். ஒருநாள் நாங்கள் திருச்செந்தூருக்குப் புறப்பட்டோம். காலை ஐந்துமணிக்கே அனுட்டானங்களை முடித்துவிட்டு, ஐயரிடம் விடைபெற்றுக்கொண்டோம். ஐயருக்கு இந்தமாதிரி யாத்திரைகளில் உற்சாகம் அதிகம். நடந்தால் கிருதயுகம் வரும் (க்ருதம் ஸம்பத்யதேசரன்) என்றார் வேதமுனிவர். அமர்ந்து கற்பதைவிட, நடந்து அதிகமாகக் கற்கலாம் என்பதை நானே அறிந்துகொண்டேன். ஐயர் புன்னகையுடன் ஆசி கூறி, எங்களுடன் 'ஐயன் வாய்க்கால்'வரையில் வந்து வழியனுப்பினார். அச்சமயம் நாங்கள் திருவாய்மொழிப் பாசுரம் பாடினோம்.

**ஆராவமுதே ! அடியேனுடலம் நின்பாலன்பாயே**
**நீராயலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே,**
**சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த்திருக்குடந்தை**
**ஏரார் கோலம் திகழக்கிடந்தாய் ! கண்டேன் எம்மானே !**

என்ற பாசுரத்தில் ஐயர் சொக்கிப்போனார். வயல்களில் நெற்கதிர் காற்றில் அசைந்தாடின. "செந்நெல் கவரிவீசும் செழுநீர்க்குடந்தை" என்பது எவ்வளவு அழகான கவிச்சித்திரம். 'கண்ணனே கவி... கண்ணனைப் பாடிய நம்மாழ்வார் கவியின் அழகைத்தான் சொல்லில் காட்டினார்." என்றார்... உடனே "ஆழ்வார் திருநகரிக்குப்போனதும் திருப்புளியைப் பார்த்து எனக்கு எழுதவேண்டும்; பாரதி!" என்றார்... 'ஆஹா' என்று நாங்கள் விடைபெற்று உற்சாகமான கீதங்களுடன் திருநெல்வேலி ரஸ்தாவில் இராணுவநடை போட்டுச் சென்றோம்; வழியிலுள்ள ஊர்களைச் சுற்றிப் பார்த்து, ஒரு வாரத்தில் திருக்குருகூருக்கு வந்தோம்... நான் ஆவலாக உடனே திருப்புளியாழ்வார் தரிசனத்திற்கு ஓடிச்சென்றேன்... அன்றிருந்ததுபோலவே அந்தப்புளியமரம் இன்றும் பசும்பொலிவுடனிருக்கிறது!... அதில் பறவைகள் உல்லாசமாகப் பாடிக்கொண்டிருந்தன. ஆற்றைச் சார்ந்த மரங்களில் குயில்களும் கருடன்களும் கிளிகளும் சேர்ந்து பாடுவதைக்கேட்ட எனக்கு பிருந்தாவனத்தின் நினைப்பு வந்தது. பொருநை நதி யமுனையாய்விட்டது. பறவைகளெல்லாம் "கிருஷ்ண கிருஷ்ண!... ராமா ராமா!" என்று திவ்யநாமங்களைப் பாடுவதுபோலிருந்தன... உலகத்தையே மறந்துபோனேன்... ஆற்றில் முழுகி வேட்டியை உலர்த்திக் கட்டிக்கொண்டு, உள்ளே பெருமாள் சேவைசெய்துவந்து, "வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செல்ல... ஆற்றல் மிக்காளும் அம்மானே" என்ற பாசுரத் தொகுதிகளை மனமுருகிப் பாடிக்கொண்டே திருப்புளியின்கீழ் தியானத்தில் அமர்ந்தேன். கண்ணனிடம் எப்போதும் காதல்கொண்ட என் உள்ளம், அன்று பெற்ற ஆனந்தத்தைச் சொல்லால் அளக்க முடியாது. நம்மாழ்வார் பாசுரத்தின் ஆழ்ந்த பொருள் அன்றே எனக்குத் தெளிவானது. எவ்வளவு அற்புதமான, வாய், மனத்திற்கெட்டாத உன்னத நிலையிலிருந்து அவர் தமது சுயானுபூதியை அள்ளியள்ளிக் கலைச்சுவையுடன் நமக்கு அருளினார்!... மதுரகவி வாழ்க! அவரே நம்மாழ்வார் கவிதையை உலகிற்குதவினார். நம்மாழ்வாரின் பக்திப்பரவசத்தை மதுரகவியின் உள்ளத்துடன் அன்று அனுபவித்தேன். அப்போது திருநாளுங்கூட... நம்மாழ்வார் பாசுரங்கள் செவியில் ஒலித்துக்கொண்டேயிருந்தன. எனது உடலே மாணவருக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தது, என் உயிரைக் கண்ணன் கொள்ளைகொண்டு நம்மாழ்வார் உள்ளத்தில் கலந்துவிட்டான்... இரவில் பிரமசாரிகள் உறங்கியபிறகு, நான் ஏகாந்தமாகத் திருப்புளியடியில் தியானித்தேன். அப்போதே "ஊரெல்லாந் துஞ்சி" என்ற பாசுரத்தின் உள்ளனுபவம் எனக்கு விளங்கிற்று... மனம் இறந்து

புத்தியில் லயித்தது. புத்தி உள்ளத்தில் லயித்தது. உள்ளத்தில் பள்ளி கொண்ட வள்ளலை தியானத்திற் கலந்திருக்கும் இன்ப உணர்வில் நம்மாழ்வார் பாடிய கிருதயுகக் காட்சிகள் தோன்றின. "போலிக போலிக" என்று உள்ளம் ஆனந்தகானம் செய்தது. அருகில் ஓடும் ஆறு அந்த ஆனந்தப்பாட்டிற்குச் சுருதி கூட்டுகிறது. கண்ணன் விளையாடிய இந்த ஞான பூமியில், காரிருட் பேய்கள் புகுந்து நம்மை அடிமை செய்திருக்கும் அலங்கோலம் ஒருபுறம்! மற்றொருபுறம் இதெல்லாம் காலச்சுழலில் மறைந்துபோகும். எத்தனையோ அரசுகள் காளான்போலப் பூத்து மண்ணுகின்றன. கண்ணன் அரசு என்றும் உண்மை என்ற தைரியம் எழுந்தது. மறுபடியும் பிருந்தாவனக்காட்சிகள் உள்ளக் கண்முன் ஆனந்த நடனமாடின.

காலையில் ஐயருக்குக் கடிதம் எழுதினேன்... அதில் சில வரிகள் இவையாம்.

'உனக்கு அரியணை வேண்டுமா, ஆழ்வார் திருநகரிவேண்டுமா?' என்று கேட்டால், நான் "நகரிகூடவேண்டாம். அந்தத் திருப்புளியடியில் அமர்ந்து பறவைப் பாட்டையும் கோயில் பாசுரங்களையும் கேட்டுக்கொண்டிருந் தாலே போதும்', என்பேன். ஐயரே, நாம் ஏதோ கலை கலை என்று எழுதி வருகிறோமே, இந்தப் பாசுரங்கள் பாடப்பாடத் தெவிட்டவில்லை. இவற் றைப் பாடும்போது உள்ளம் உள்ளே லயித்து, மனிதனுடைய தெய்வ சக்திகள் எழுந்து இன்ப நடனம் புரிகின்றன. இப்படிப்பட்ட உண்மை யான அருட்கவிகள் எங்கே? நாம் இவற்றையெல்லாம் பொருட்படுத்து வதில்லை. நாம் தெருவில் உண்டியல் வசூலிக்கவோ, கள்ளுக்கடை மறி யலுக்குப்போகவோ, சிறைசெல்லவோ வெள்ளைப் பாட்டுகளைத் தேடுகி றோம். நமது தலைவிதி இப்படியாய்விட்டதே! நமது அடிமைத்தளை நீங்கி, மறுபடியும் உன்னதமான திவ்ய கீதங்களை தேவ கானங்களைக் கலையுரு வில் கண்டு மகிழும் காலம் வருமா? "ஒன்றிய திங்களைக் காட்டி ஒளிவளர் வண்ணனே" என்னும் அருட்கவியை நாமும் காண்போமா? கவிதையின் உருவும் பயனும் எனக்கு இந்தத் திருப்புளியின் அடியிலேதான் பளிச் சென விளங்கின. "அனாஹத ஓங்காரம் கண்ணன் குழல்போல் ஒலிக் கிறது. எனது ஜீவகோபியை யாரோ பிருந்தாவனத்திற்கு அழைப் பதுபோலிருக்கிறது... அந்த அழைப்பு நேற்றிரவு ஒரு கவியாக மலர்ந் தது. அதையே தங்களுக்கு ஆழ்வார் பிரசாதமாக அனுப்புகிறேன். பிரமசாரிகள் சௌக்கியமாகவும் உற்சாகமாகவும் இருக்கிறார்கள். ஊரெல்லாம் பாசுரமும் பஜனையுமாயிருக்கிறார்கள். எங்கள் பஜனையும் அமோகமாக நடக்கிறது.

அருள்பெற்ற மகான்கள் இயற்கையின் உள்ளத்தில் இறைவனையும், அவனையே தம் உள்ளத்திலும் கண்டு, அந்த இன்பத்தில் ஆர்வமுழக்கம் செய்ததுதான் பாட்டு, பாசுரம் என்பவை... நமது காலத்தில் தாகூரின் பாட்டை உலகம் கொண்டாடுவது அதிலுள்ள தெய்வச்சுவைக்காகவே. நம்மாழ்வார் பாடுகிறார் கேளுங்கள், கேளுங்கள்...

நின்று நின்று, பலநாள் உய்க்கும் இவ்வுடல் நீங்கிப்போய்,
சென்று சென்றாகிலுங் கண்டு சென்மங் கழிப்பான் எண்ணி...
ஒன்றியொன்றி உலகம் படைத்தான் கவியாயினேற்கு
என்றுமென்றும் இனி மற்றொருவர் கவி ஏற்குமோ?

 1—2—44

# குழலிசை

சிந்துபைரவி ராகம் ரூபக தாளம்

குழலிசைத்தது குழலிசைத்தது
கோவிந்தக் காதலர்காள்!
மழலையும் யாழும் அமுதும் பொழிந்தது
மாதவன் பூங்குழலே!
அழகின் கலைவடி வாகிய மோகனன்
ஆவியைத் தொட்டிழுத்தான்!
வழி திறந்தது; வாருங்கள் ப்ருந்தா
வனத்தினுக் கேகிடுவோம்!

ஏட்டிலடங்கா ஒருவன்வந் தென்னுளங்
கொள்ளைகொண் டேகியபின்,
ஏட்டைத் துளைத்துத் தளைத்த கவியெனை
ஏளனஞ் செய்ததம்மா!
காட்டுக் குழல்போல் அவன் கையில் என்னைக்
கருத்துடன் ஈந்துவிட்டேன்.
பாட்டலை யேறிப் பரவசமாய் ஜீவப்
படகு செல்லுதம்மா!

உள்ளம் உருகி, யுருகி யமுனையின்
வெள்ளமாய் ஓடாதோ?
கள்ள மனமுந் திருந்தி ப்ருந்தாவனக்
காட்டில் அலையாதோ!
மெள்ள மெள்ளக் கண்ணன் வந்து நம்முள்ளே
விளையாட மாட்டானோ?
அள்ளி நம் அன்பை யணைந்துயிர் வாழ்வினில்
ஆனந்தங் காட்டானோ!

மாதவன் இல்லாத மானிட வாழ்வொரு
மண்புழு வாழ்க்கையன்றோ!
மாதவன் இல்லாத கீதங் குடிவெறி
மாக்களின் கூச்சலன்றோ!
மாதவனில்லாக் கலையெல்லாம் ஊரை
மயக்கிடும் மாயமன்றோ!—
காதலை யீந்தவன் காதலைப் பற்றிக்
களிநட மாடிடுவோம்!

சுத்தானந்த பாரதி

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்.

# நம் சகோதரிகளுக்கு மட்டும்

சங்கராந்தியும் வந்து சென்றுவிட்டது. தையும் பிறந்துவிட்டது; 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கும் தாய்மார்கள் எத்தனை பேர்? பாட்டிமார்கள் எத்தனை?

தன்னுடைய ஐந்து வயதுப் பேத்தியைக் குறித்து, "ஏண்டாப்பா, நம் பட்டுவுக்கு இப்பொழுதிருந்தே வரன் பார்த்தால்தானே, நான் உயிருடன் இருக்கும்போதே காலாகாலத்தில் ஒரு கல்யாணத்தை பண்ணிப் போட்டுக் கண்மூடலாம்?" என்று நச்சரிக்கும் கிழக்கோட்டான்கள் எத்தனைபேர்!

ஆனால் அவையெல்லாம் சாரதாச் சட்டம் வருமுன். இப்பொழுதோ, பெண்களுக்கு 12-வது பிராயத்துக்குள் விவாகமாகி விடவேண்டுமென்கிற வலுக்கட்டாயம் இல்லை. ருதுமதி விவாகத்திற்கு ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசாரியார் சுவாமிகூட அனுமதி தந்துவிட்டார். ஆகையால் பால்ய விவாகம் இரகசியமாக நடப்பதுகூட நின்றுவிட்டது எனலாம். பதினெட்டு இருபது என்று, தம் மனசுக்கும் பெண்ணின் மனசுக்கும் உகந்த மணமகன் கிடைக்கும்வரையில் பெற்றோர்கள், பெண்களைக் கன்னிகையாக விட்டிருப்பது வழக்கமாகிவிட்டது.

விவாகம் சாஸ்திரப்படி, ஹிந்துக்களுக்கு ஏற்பட்டுள்ள பதினாறு ஸம்ஸ்காரங்களில் ஒன்று. மனிதனுடைய லௌகிகம், வைதிகம் இரண்டையும் பாதிக்கக்கூடியது. விவாகம் நம்மவர் வாழ்க்கையில், ஒரு முக்கியமான-ஒரு புனிதமான - சம்பவம். சந்தோஷ வாழ்விற்கு அடிகோலுகிற ஒரு விசேஷச்சடங்கு. வேதத்தில் கூறப்படுகிற நான்கு ஆசிரமங்களிலே, மிக முக்கியமான ஆசிரமதர்மம் விவாகத்தில் ஏற்படும் கிருஹஸ்த தர்மம். அத்தகைய ஒரு மகத்தான சடங்கை, 'ஒரு விளையாட்டுப்பொம்மையின் கல்யாணச் சடங்காக மாற்றிப்போட்ட காலக்கொடுமையை என்ன சொல்வது? வேதகாலத்தில் நடைபெறாத விஷயம் காலத்தின்போக்கை யொட்டி மத்தியகாலத்தில் நடைபெற்றுவந்தது.

பக்ஷிபோலப் பறந்தோடிச் சந்தோஷமாக ஆடிப்பாடித்திரியும் பால்ய வயதில் இளங்கன்னிகைகளை 'மனைவி' என்ற மகத்தான பதத்திற்குப் பாத்திரமாக்கி, அந்தப் பால்யை தலையில், கிரஹஸ்தாச்ரம தர்மம் என்ற மகத்தான தர்மத்தைச் சுமத்தி, குழந்தைகளைச் சரியானபடி பராமரிக்கத் தெரியாத வயதில், அவர்களைத் தாய்மார்களாக்கிப் போடும் இந்தக்கலிகால வழக்கத்தைத் தற்கால உலகில் எந்த அறிவாளிதான் விரும்பக்கூடும்?

12 வயதுக்கே, பெண்களைப் புக்ககம் அனுப்பி, அங்கே எல்லோரும் அவளை, "நீ அப்படி நில், இப்படி நட, ஜன்னல் வழியாக எட்டிப் பாராதே, வாசற்படி தாண்டாதே, உரக்கப் பேசாதே, நினைத்தபோது சாப்பிடமுடியாது; வீட்டுப் பெரியவர்கள் சாப்பிட்ட பிறகுதான் சாப்பிட வேணும். "என்றெல்லாம் கட்டுப்படுத்தி, பெண்களின் இன்ப வாழ்வைத்

துன்ப மயமாக்கும் வழக்கம் போனதற்கு 'ஹரிபிலாஸ் ஸாரதா' என்ற மேதாவிக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

சாவித்திரியும், தமயந்தியும், சீதையும், திரௌபதியும் செய்துகொண்டதுபோல, தம் மனஸுக்குப் பிடித்த வரனுக்கு மாலையிடும் பாக்கியம் இந்துப் பெண்களுக்கு இப்போது கிடைத்திருப்பது, “14 வயதுக்கு உட்பட்டு பெண்களுக்கும், 18 வயதுக்கு உட்பட்டு பிள்ளைகளுக்கும், விவாகம் நடத்தப்படக்கூடாது” என்ற சாரதா சட்டம் ஏற்பட்டதால் அல்லவா?


அதேபோல, பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை நிறுத்தியதற்கு, ராஜாராம் மோஹன்ராயிக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

கணவனுக்குச் செய்யப்பட்ட அவமானத்தைச் சகிக்கமுடியாமல் ரோஷமுற்று, ஓமாக்கினியில் சதி செய்துகொண்ட, ஸதீமணி பார்வதி விஷயத்தில்தான் நாம் 'ஸதியை' புகழமுடியுமேயன்றி, உற்றாரும் புரோகிதர்களும் பிடித்துத் தள்ள அரை மனசுடன், கணவன் சிதையில் அக்கினிப் பிரவேசம் செய்யும் இளம் பூங்கொடிகள் விஷயத்தில் நாம் சதியைக் கொண்டாடமுடியுமா?

இந்தியப் பெண்களின் நிலைமையை மத்தியகாலத்தில் ஏற்பட்ட கொடுமையினின்றும் சீர்ப்படுத்தி உயர்த்துவதற்கான சட்டதிட்டங்களை முதல்முதல் வகுத்த பெரியோர்கள் ராஜாராம் மோஹன்ராயும் ஹரிபிலாஸ் சாரதாவும் ஆவர். பின்னால் அவர்கள் காட்டிய வழிப்படி இந்துப் பெண்களின், உரிமைகளைச் சமூகத்தில் நிலைநிறுத்துவதற்கான முறையில் பல சட்டச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அவை இப்பொழுது அமுலுக்கு வந்துகொண்டிருக்கின்றன. ஆயினும் இன்னும் பல சட்டச் சீர்திருத்தங்கள் பெண்கள் விஷயத்தில் வரவேண்டியிருக்கின்றன.

இங்ஙனம் தனித்தனியாகச் சீர்திருத்தங்களை அவ்வப்போதுச் செய்வதால், முன்னதற்கும் பின்னதற்கும் முரண்பாடுகள் அதிகரித்துவிடும், என்று பெண்கள் நிலைமையைச் சீர்திருத்துவதற்கான, (அவர்கள் உரிமைகள் உடைமைகள் என்ற விதத்தில்) சட்டதிட்டங்கள் யாவற்றையும் மொத்தமாக நிர்ணயித்து, பொறுக்கியெடுத்துத் தொகுத்துக்கொடுப்பதற்காக, ராய் கமிடி என்ற ஒரு கமிடியை சர்க்கார் ஸ்தாபனம் செய்துள்ளார்.

அந்தக் கமிடியார் ஒன்று கூடி ஆலோசித்து வேலை செய்து வருகையில், பெண்கள் தாமும் தம் நிலைமையை யோசித்து ஆராய்ந்தறிந்து, ஏற்கெனவே தமக்குள்ள உரிமை கடமைகள் என்னென்ன என்பதைத் தெரிந்துகொள்வார்களேயானால், மேற்பட்டு, இன்னும் நமக்குத் தேவையான முறைகளில் சட்டச் சீர்திருத்தங்கள் ஏற்படுத்துவதற்கு உதவி புரியலாகும்.



# உதயசூரியன்

வை.மு.ஸ்ரீநிவாஸன். எம்.ஏ.பி.எல்.

## 2. நாமகரணமும் நாற்பது திங்களும்

மங்களபுரியில் எங்கும் மங்கள கோஷம். அந்த சமஸ்தான மக்களுக்கு மகிழ்ச்சி உதயமாகிவிட்டது. எங்கும் இதே பேச்சு தான். ஊரெல்லாம் திருவிழாபோல் கலகலப்பாகவிருந்தது. ஒவ்வொருவருக்கும் தம் வீட்டிலேயே ஒரு புத்திரன் பிறந்துவிட்டது போன்ற ஒரு சந்தோஷமும், திருப்தியும். இளவரசன் உதித்த வேளை தங்களுக்கும் நல்லகாலம் பிறந்து புத்திரப் பேறு கிடைக்குமோ என்று மலடிகளும் எதிர்பார்த்தார்கள்.

இவ்வாறாக ஜனங்களின் அன்பிற்குப் பாத்திரமாகிய அரசிளங்குமரன் வளர் பிறை மதியைப் போன்று வளர்ந்துவந்தான். மூன்றாவது மாதம் தான் நாமகரணம் செய்வதென பெரியோர்



களால் நிச்சயிக்கப்பட்டது. அந்த சமஸ்தானத்தின் சரித்திரத்திலேயே கண்டறியாத தானதருமங்கள் செய்யப்பட்டன. நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை யென்பதுபோல் ஜனங்களின் மனதைக் குளிரப்பண்ணினால் ராஜ்யத்தின் பெருமைக்கும், அபிவிருத்திக்கும் குறைவில்லையென்பதை யுணர்ந்த கருணாகரன் தனக்கு யுக்தமாகத் தோன்றிய விதங்களிலெல்லாம் தர்மங்கள் செய்தான்.

நெற்றி நீர் நிலத்தில் விழ நிதமும் உழைக்கும் ஏழைகளுக்குத்தான் விசேஷமான வெகுமதிகள் கிடைத்தன. அவர்களது சொந்த நிலங்களுக்கு ஒரு வருஷத்திற்கு வரி கட்டவேண்டியதில்லை! தவிர, மூன்று மாதங்களுக்கு ஜீவனம் செய்வதற்குப் போதுமான அளவு தனமும் தானம் செய்யப்பட்டது. சொந்த நிலமில்லாத ஏழைகளுக்கு இனமாக பூமி அளிக்கப்பட்டது. இதுவரை கலப்பையைக் காணாத கட்டாந்தரைகள் பல இப்போது பசுமையான பயிரைத் தாங்கி நிற்க அரசன் கிருபை செய்ய, இனம்தாரிகள் பயிர் வேலை தொடங்கிவிட்டார்கள். இதே போல் பண்டிதர்களுக்கும், காயகர்களுக்கும் அளிக்கப்பட்ட ஏராளமான தனத்தைக்கொண்டு பலர் புதிய நிலயங்களை ஸ்தாபித்துக் கலையைப் பரவச்செய்யமுடிந்தது. இவ்வாறே பயிரும், தொழிலும், கலையும் அபிவிருத்தியடையக்கூடியவிதத்தில் மிகச் சிறப்பாக தருமங்களைச் செய்தான். சூரியனே உதயமாகியதுபோல் இளவரசன் உதித்திருக்கையில், ஸமஸ்தானமென்னும் தடாகத்தில் அபிவிருத்தி என்னும் புஷ்பம் மலருவதில் ஆச்சரியமென்ன?

* * * *

மூன்றாவது மாதம் சுபமுகூர்த்தத்தில் நடைபெறும் நாமகரண மகோத்ஸவத்திற்கு எல்லா அரசர்களுக்கும், சிற்றரசர்களுக்கும் அழைப்புகள் சென்றன. கருணாகரன் முடி சூட்டி சிம்மாஸன மேறியபோது கூட அவ்வளவு கொண்டாட்டங்களோ, சிறப்போ, அழகோ காணப்படவில்லையென்று சொல்லும் வண்ணம் சிறுவனின் நாமகரணத்திற்கு ஜனங்களும், இதர தேசத்தரசர்களும், விருந்தினரும் மிக உத்ஸாகத்துடன் இவ்வைபவத்தைச் சிறப்பிக்க முன்வந்தார்கள்.

சுபமுகூர்த்தத்தில், தேஜஸ் நிறைந்திருந்த சபையில் கருணாகரனும் கார்த்யாயினியும் மணையிலமர்ந்து மங்கள கோஷத்தினிடையே குழந்தையின் காதில் "நமோ நாராயணாய!" என்று முதலில் சொல்லிவிட்டு, "உதய பாஸ்கரா!" என்று அன்பு ததும்ப அழைத்தார்கள். ஸபை முழுதும் "உதய பாஸ்கரா!" என்ற சொல்லே எதிரொலித்து ரீங்காரம் செய்தது. அங்கு கூடியிருந்தவர்களில் எல்லோருடைய கவனமும் உதய பாஸ்கரனின்மீது செல்ல, ஸிம்மபுரி அரசன் பலவந்தசேனன்மட்டும் ஏதோ ஆழ்ந்த யோசனையிலும் கலவரத்திலும் ஈடுபட்டிருந்ததை கருணாகரனின் மந்திரி குணசேகரன் கவனியாமலில்லை,

* * * *

சூரிய சந்திராதி நக்ஷத்திரங்கள் தம்தம் கடமைகளை முறையே செய்ய, நாட்கள் ஓடி மாதங்களாக, மாதங்கள் நிறைந்து வருடங்கள் உருண்டோட, இறைவனருளால் உதய பாஸ்கரனுக்கு மூன்றாவது பிறந்தநாள் கொண்டாடும் வேளையும் வந்தது; மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். அரண்மனை தச்சன் தனது காணிக்கையாக பாஸ்கரனுக்கு மூன்றாம் பிறந்த தினத்தன்று அளித்த ஆடும் குதிரையில் இளவரசனை அலங்கரித்து உட்காரச்செய்து விளையாடுவதே மைத்ரேயிக்கு பெரும் ஆனந்தக் கூத்தாக இருந்தது. அழகுக்கு அழகு செய்வதுபோல் அந்த அழகு பிம்பத்தை அலங்கரித்துத் தன் கண்குளிரப் பார்த்து "என் செல்லமே, குதிரையில் ஏறடா! சூரியன் உதய காலத்தில் தன் குதிரைகளை சாரத்யம் செய்து ஜகஜ்ஜோதியாய் பிரகாசிப்பதுபோல் இந்தச் சின்ன வயதில் பொம்மைக்குதிரையில் ஏறி சாரத்யம் பண்ணடா என் கண்ணே! நீ பெரியவனானால் "பஞ்சவர்ண"க்குதிரைகூட ஏறி வெற்றி பெருவாயடா என்



ராஜா!" என்றெல்லாம் வாயாரக் கூறிக் களிப்பாள். ரூபத்தின் சௌந்தர்யத்தைத் தோற்கடிக்கும் வண்ணம் குரலின் இனிமையும், மழலையின் அழகும் அமைந்திருந்தன அரசிளங்குமரனுக்கு. அவன் சொல்லாத வார்த்தைகளில்லை; அவன் மழலையில் காணாத சங்கீதம் இல்லை. "அவனைக் காண்பதே ஆனந்தம்; அவன் சொல்லமுதைப் பருகுவதே பேரானந்தம்; அவனுடன் விளையாடுவதே பூர்வ ஜன்மத்தில் செய்த புண்ணியத்தின் பலன்" என்று எண்ணியவள் மைத்ரேயி. பிறப்பிலிருந்து தன் தாயைவிட மைத்ரேயியிடமே அதிகமாகப் பழகிவந்ததால் பாஸ்கரன் ஒருக்ஷணம்கூட அவளைவிட்டுப் பிரிவதே கிடையாது.

தனக்கு எது வேண்டுமாயினும் அதை மைத்ரேயி மூலமாகத் தான்செய்து கொள்வான். இவனுக்கு வேண்டிய பணி செய்து கிடப்பதுதான் தனது ஜீவியத்தின் கடமை என்று மைத்ரேயி எண்ணுவதற்கு ஒரு முக்கியமான—ரகஸியமான—காரணம் இருக்கத்தான் செய்கிறது! அவள் அவனுடைய அத்தை! கருணாகரனின் தந்தை கிருபாநிதிக்கும், அரண்மனை காயகி சுமித்ராவுக்கும் பிறந்தவளே மைத்ரேயி. இது கருணாகரனுக்கும் கார்த்தியாயினிக்கும் நன்கு தெரிந்த விஷயமாதலால்தான், மிகப் பிரீதியுடன் அவளை நல்ல நிலையில் அந்தப்புரத்திலேயே தனிப் பொறுப்புடனும், மதிப்புடனும் இருக்கச்செய்தார்கள். "அத்தையின் அன்பு" என்பது ஜகப்பிரஸித்தமல்லவா? மைத்ரேயி தன்னை பகிரங்கமாக அத்தை என்று சொல்லிக்கொள்ளமுடியவில்லையே தவிர மிகவும் சுதந்திரத்துடன் தன் ப்ரீதியைக் காண்பித்துவந்தாள்.

* * * *

உதய பாஸ்கரன் உதித்து நாற்பது திங்களாகின; இந்த மூன்றேகால் வருஷங்களுள் மங்களபுரிக்கேற்பட்ட பெருமையும், உயர்வும் கூறத்திறமில்லை. கட்டாந்தரைகளிருந்தவிடங்களில் பசும்பயிர்கள்; குப்பைகூளங்களிருந்த இடங்களில் மைதானங்களும், நந்தவனங்களும்; படிப்பு வாசனையற்ற குக்கிராமங்களில் குருகுலங்கள். கலை, தொழில், ஐசுவர்யம் ஆகிய எல்லா துறைகளிலும் அபரிமிதமான முன்னேற்றம். பாஸ்கரனின் ரூபம் எழில் பெறுவதுபோல், மங்களபுரியின் புகழும் ஓங்கிற்று.

* * * *

மைத்ரேயியை "அத்தை" என்று கூப்பிடுவதேபோல், "மைத்தே" என்று மழலையுடன் கொஞ்சிக் கூப்பிடும் பாஸ்கரனுடன் போட்டிபோட்டு அவளுடன் குலாவுவதற்கென்றே ராணியாருக்கு இன்னும் ஒரு குழந்தை பிறக்கப்போகிறது என்ற செய்தி ஊர் முற்றும் பரவியது. "இளவரசன் பிறந்த வேளையின் சிறப்புதான் இவ்வளவு அமோகமான நன்மைகள் ஏற்பட்டுள்ளன நமது மங்களபுரிக்கு, அடுத்துப் பிறக்கும் குழந்தையும் நல்ல வேளையில் நல்ல அதிர்ஷடத்துடன் பிறக்கவேண்டுமே" என்றே எல்லோரும் வேண்டினார்கள். பிரார்த்தனை செய்வது மானிடரின் கடமை. அதற்குப் பலனளிப்பது பகவானின் திருவுள்ளம்.

ஸ்ரீமான் ரா. ஸ்ரீ. தேசிகன் எம். ஏ.,

# தீர்க்கதரிசிகள்

[மேற்கண்ட தலைப்பில் ஹெச். ஜி. வெல்ஸுடைய கனவைப்பற்றி "ஆண்டு மலரில் எழுதியதைப் படித்தீர்கள். இதில் பர்னர்ட்ஷா, ரவிந்திரநாத் தாகூர் இருவர்களுடையதைப்பற்றி எழுதியுள்ளதைப் படித்து மகிழுங்கள்...ப - ர்.]

## பர்னர்ட் ஷா

முதல்முதலாக அவர் காண்கிற கனவு இதுதான். ' உலகத்தில் வறுமை போகவேண்டும்; வறுமை ஒரு பெருங்குற்றம்: அது ஒழியவேண்டும்" சாமுவேல் பட்லர் (Samuel Butler) ' எர்வானில்'' வியாதி ஒரு குற்றமென்றார். "அது மறையவேண்டும்; அதேமாதிரி வறுமைப் பேயை மாய்க்கவேண்டும் என்கிறார் ஷா. சாமுவேல் பட்லரின் ஞானக் குழந்தை அன்றோ அவர்? பசிப்பிணியில் வாடி வதங்கின பாரதியாரும்,

"இல்லையென்ற கொடுமை-உலகில் இல்லையாக வைப்பேன்"
"தனி யொருவனுக் குணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்"

என்று முழக்கஞ் செய்கிறார்.

உண்மையான சமுதாயத்தில் இரக்கத்திற்கு இடமில்லை. ஈகைக்கு இடமில்லை. இரக்கமும்,ஈகையும் குற்றங்களே; அவைகளும்ஒழியவேண்டும். வறுமையை ஒழிக்க மார்க்கம் இதுதான். அபேதவாதத்தை ஒப்புக் கொள்ளவேண்டும். எல்லாச் சொத்தும் அரசாங்கத்தைச் சேர்ந்தது. மனிதனுடைய யோக்யதைக்கும் தேவைக்கும் தகுந்த திட்டம் செய்யவேண்டும்.

ருஷியா தேசத்து அரசியல் அமைப்பைப் பார்த்து பெரு மகிழ்ச்சியில் ஆழ்ந்தார் ஷாவும், பசிப்பிணியை வேரோடு அங்கே களைந்து எறிந்துவிட்டார்கள். எல்லாம் கர்மவசமென்று கை மறித்து நிற்கும் மனிதன் கொள்கைக்கு சாவுமணி யடித்துவிட்டார்கள். அந்நாட்டிலே மனிதன் உலகத்தை ஓர் அமர நாடாக்கிவிடலாம் என்ற உண்மை உதயமாகிவிட்டது. எல்லாம் பொது உடைமையாகிவிட்டால் இல்லாதது இல்லை என்ற தத்துவத்தைக் கண்டார் ஷாவும், "எல்லாம் அரசன் செய்கிறான். புத்திரர்களைப் பெற்றார்களே தவிர, மற்ற காரியங்களை அரசன் செய்கிறான். அவன்தான் உண்மையான பிதா, அவர்களை நல்வழிக்கொண்டு வருகிறான். அவர்களைக் காப்பாற்றுகிறான்'' என்று ரகுவம்சத்தில் காளிதாசன் மொழிகின்றார். கம்பரும் இக்கனவைத்தான் காண்கிறார்,

எல்லாருமெல்லாப் பெருஞ்செல்வமு மெய்தலாலே
இல்லாருமில்லை யுடையார்களுமில்லை மாதோ

ஆனால் அபேதக்கொள்கை ஒருநாட்டில் மட்டும் இருந்தால் போதாது. எல்லாநாடுகளிலும் இக்கொள்கை பரவுமானால், வீடு அங்கில்லை. இங்கே, இப்பொழுதுதானே என்று ஆனந்தத்தாண்டவமாடலாம்.

வறுமையொழிக்க இதுதான் அடிப்படை. வறுமை நீங்கினால்தான் அறிவுணர்ச்சிக்கு மார்க்கம் பிறக்கும்.

மேலும் ஷா அரசியலைப்பற்றி என்ன எண்ணங்கள் வைத்திருக்கிறார் என்ற விஷயம் நமது ஆராய்ச்சிக்குரியதாகும்.

ஷாவுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை. வெல்ஸைப்போலவே மேதாவிகளின் ஆட்சியில்தான் அவர் நம்பிக்கை வைக்கிறார். (The aristocracy of the intellect or the Rule of the wise)

"சுதந்திரம் என்கிறது, ஜனநாயகமென்கிறது இப்பேர்ப்பட்ட வெறும் பேச்சுக்களிலும், பொம்மைக்கனவுகளிலும், அவருக்கு உடன்

பாடில்லே,சர்வாதிகாரத் தத்துவத்திற்குப் பயந்தார்கள்;ஒரு சர்வதிகாரிக்குப் பதிலாக ஆயிரம்வித சர்வாதிகாரிகள் கிளம்பிவிட்டார்கள். பல துறைகளிலும், பல சர்வாதிகாரிகளேப் பார்க்கிறோம் என்கிறார் அவர்.

ஆனால் ஷா ஒரு புரட்சிக்காரர் இல்லே, என்று தீர்மானித்துவிடாதீர்கள். அவருடைய புரட்சியின் மர்மம் வேறு. அரசியல்களின் அமைப்புக்களை மாற்றினால் மட்டும் போதாது. மனிதனுடைய சுபாவத்தையே மாற்ற வேண்டும். மாற்றமுடியுமா? ஆம், முடியும். மனிதனுடைய ஆத்மசக்தியால் எல்லாம் சாதிக்கலாம் என்கிறார். வள்ளுவரும் எல்லாவற்றையும் குலேக்கிற விதியின் வலிவைப்பற்றிக் கூறினாலும், முயற்சியினால் எதையும் சாதிக்கலாம். எண்ணம்மட்டும் திடமான எண்ணமாயிருக்கவேண்டும்.

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்" -திருக்குறள்

ஆத்மசக்தியால் எதையும் சாதிக்கலாம் என்ற தத்துவம் உண்மையானால், நமது ஆயுளேயும் நீடித்து வைத்துக்கொள்ளலாம்.

ஏன் ஆயுளே நீடித்து வைத்துக்கொள்ளவேண்டும் என்ற கேள்வியை ஒருவர் கேட்கலாம். மனிதனுடைய எண்ணங்களும் கனவுகளும் சொற்ப நாளில் நிறைவேறுகிறதில்லே. ஆயுள் விருத்தியானால், அவைகளே உருவாக்கலாம். அர்ச்சுனன் கண்ணனைக் கேட்கின்றான். "யோகம் செய்துகொண்டிருக்கும்பொழுது, பிராணன் போய்விட்டால் என்ன பண்ணுகிறது?"..."அப்பா, குழந்தாய், நல்லது செய்தால் அது கெட்டா போய்விடும்? பயப்படாதே. நீ விட்ட யோகம் உன்னைப் பின்தொடரும்; யோகியினுடைய குலத்தில் நீ பிறப்பாய்" என்ற சமாதானம் சொல்லுகிறார்.

நாம் கர்ம தத்துவத்தில் நம்பிக்கை வைக்கிறோம்; மறு பிறப்பில் நம்பிக்கை வைக்கிறோம். இந்த ஜன்மாவில் பாதிவிட்ட கனவுகளெல்லாம் அடுத்த ஜன்மத்தில் பூர்த்தி அடைகின்றன. இங்கே எப்படிப்போனாலென்ன? அங்கே அது உருபெற்றுவிடும். நம்மாழ்வார் தம் அனுபவத்தைப் பாடுகிறார்.

"மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து அடியை யடைந்து உள்ளம் தேறி
ஈறிலின்பத் திருவெள்ளம் யான் மூழ்கினன்"

பர்னாட்ஷா இப்பொழுது கிடைத்த தேகத்தை நீடித்து வைத்துக்கொண்டு காரியத்தைச் சாதிக்கவேண்டுமென்கிறார்.

'மெதுசலாவுக்கு மீண்டும்' (Back to Methusela) என்ற நாடகத்தில் தம் கொள்கைகளே வெளியிடுகிறார். (மெதுசலாவின் வயது 969 வருஷம்) தூக்கத்தைப்போல மரணமும்; தூக்கம் ஒரு பழக்கம்; பழக்கத்தைத் தள்ளி வைக்கமுடியும், மரணமும் ஒரு பழக்கம். செத்து செத்துப் பழக்கமாகி விட்டது. அப் பழக்கத்தையும் அகற்றமுடியும், நீண்ட நாள் இருப்பது இயற்கை அன்னேயோடு சேர்ந்து உழைப்பதின்பொருட்டே. இயற்கை அன்னைக்கு விரோதமாய்ப்போனால், மனித சிருஷ்டியை அழித்து வேறொரு தனி சிருஷ்டி செய்து தன் காரியத்தை நடத்திவிடுவாள். மனுஷ்ய சிருஷ்டியே அவிந்துபோனாலும் போய்விடும். மனுஷ்ய சிருஷ்டிதான் இயற்கை அன்னே யெழுதிய மாபெரும் புத்தகத்தின் கடைசி அத்தியாயமா? இல்லே இன்னும் எத்தனை அத்தியாயங்களே அவள் எழுதப்போகிறாளோ யாருக்குத்தெரியும்? எதற்காக ஆயுளே அதிகப்படுத்தவேண்டும்? மெதுசலாவுலகத்தில் ஆயுளே அதிகரித்துக்கொண்டே போனார்கள்.

சந்ததமும் இளமையோடு இருக்கலாம். அதனால் பிரயோஜனமில்லே. நம்முடைய நோக்கமென்னது என்றதை நன்கு உணரவேண்டும்.

தம்முடைய கலிவரின் பிரயாணங்களில் (Gulliver's Travels) சுவிட் (Swift) என்ற பெரியார், வயது அதிகரித்து மரணம் வராது

போனல், உடம்புதேய்ந்து, குறுகிப் பார்ப்பதற்கு மிகக் கோரமாய்ப் போய்விடும்' என்கிறார். ஆண்களைக் காட்டிலும், பெண்கள் அதிகமான கோரத்தோடு விளங்குகின்றார்கள். ஸ்டரால்ட்பர்க்ஸ் (Struldburgs) ஜாதி யாரைக் கண்டால் போதும், வயோதிகப் பருவம் வேண்டாமென்று சொல்லிவிடுவார்கள்: எல்லாவிதக் கருவிகளும் ஒடுங்கின நிலையை அவர் வாய் கயப்புற வர்ணிக்கிறார். அச்சித்திரத்தைப் பார்த்தவன் வயோதிக பருவத்தை விரும்பமாட்டான்.

ஆனல் ஆல்டோஸ் ஹக்ஸ்லி "அநேக கோடைக்கப்பால் அன்னம் அழிகிறது" (After many a summer the swan dies) என்ற புத்தகத்தில் மற்ற கருவிகள் அழிந்தாலும் பெண்ணின் வாய் அமுதம் போகவில்லை என்கிறார்.

யயாதி மஹாராஜன் யௌவனத்தையும், அழகையும் நீண்டகாலம் வைத்துக்கொண்டு பார்த்தான். அதிலும், அவனுக்குக் கடைசியில் அரு வருப்புத் தட்டியது, விச்வாமித்திரருடைய உபாக்கியானத்தில் பலத்தின் வலிமை பிரயோஜனமற்றது; அறிவுதான் பிரயோஜனப்படும் என்ற விஷயம் தெரிகிறது. அதாவது அறிவிலே-பிரம்ம பலத்திலே-தான் தனக்கு நன்மை என்றதைத் தேர்ந்தார். அவர் க்ஷத்திரிய பலத்தைச் சுட்டெரிக்க வேண்டும். மேனாட்டார்களெல்லாம் விச்வாமித்திரருடைய நிலையில் தானிருக்கிறார்கள். நம்முடைய நாட்டுக்கலைகளே உருவாயுள்ள வசிஷ்ட ரிடம் வந்து அவர்களுடைய உள்ளம் பதமாகவேண்டும்.

ஆயுளை விருத்தி செய்துகொண்டால்மட்டும் போதாது. நம்முடைய நோக்கம் விசாலமான நோக்கமாயிருக்கவேண்டும். நம்முடைய லக்ஷிய மும் விரிந்துகொண்டே போகவேண்டும். வாழ்வு முன்னேற்றத்திலே மனிதன் வாலை நீக்கிக்கொண்டுவிட்டான், சரீரத்தையும் நீக்கிக்கொண்டு சுத்த சைதன்னியமாய்த் தோன்றவேண்டும். இயற்கை அன்னை அதையே எண்ணமாய் வைத்துக்கொண்டு அநேக அற்புதங்களைச் செய்துகொண் டிருக்கிறாள் என்று ஷா "மெதுசலாவுக்கு மீண்டும்" என்ற நூலில் குறிக்கிறார்.

போகத்திலே லக்ஷியத்தை வெல்ஸ் வைக்கிறார். போகத்தை வெறுத்த பர்னாட்ஷா அறிவிலே கண்ணை வைக்கிறார். அறிவு நாளுக்குநாள் விருத்தி யாகிக்கொண்டே போகின்றது, நான்கும், நாலும் எட்டு என்று விரலை விட்ட நாள் உண்டு. இப்பொழுது தன்னளவிலே அதுவாகத் தோன்று கிறது. ஒரு காலம் வரலாம்; பிறக்கிற குழந்தையே 'கால்குலஸ்' ஞானத் தோடே பிறக்கலாம் என்று அவர் சொல்லுகிறார்.

அறிவே வடிவான கடவுள் இன்னும் தோன்றவில்லை. அவர் இன்னும் இயற்கை அன்னையின் கர்ப்பத்தில்தான் இருக்கிறார்; அவரை வெளியிலே கொண்டுவர ஒவ்வொரு மனிதனும் பிரயத்னம் செய்தல் வேண்டும்: மனிதன் மனுஷ்யாதீதனாகவேண்டும். (Superman)

The She-ancient பழைய அவள்:—ஒருநாள் வரும்; அப்பொழுது ஜனங்களில்லை, சுத்த சைதன்னியந்தான் நிற்கும்.

The He-ancient பழைய அவன்:—அதுதான் அமர வாழ்வு.

'சிந்தை செல்லுகிற வரையில்' 'As far as thought can reach' என்ற பாகத்தில் தேகங்கள் நீங்கின, சைதன்னிய கலைத்தான் நாம் காண்கிறோம்.

பர்னாட்ஷா நிலைநாட்டப் புகுந்த விஷயம் நம் நாட்டிற்குப் புதிதன்று. ஆத்ம லக்ஷணம் கூற வந்தவர்கள் ஆத்மாவைச் சரீர சம்பந்தமற்ற சுத்த அறிவு வடிவாயும், ஆனந்த வடிவாயும் கருதியுள்ளவர்கள். பகவானுக்கு

எந்த அறிவுண்டோ, பகவானுக்கு எந்த ஆனந்தமுண்டோ, அதே அறிவும், ஆனந்தமும், ஒவ்வொரு ஆத்மாவுக்குமுண்டு என்று ஒரு சித்தாந்தக்காரர்கள் சொல்லுகிறார்கள். சரீர சம்பந்தம் போய்ப் பகவானுக்குச் சமமாக வேண்டுமென்பதே நமது கொள்கை.

வெல்ஸ், பர்னாட்ஷா - இவ்விரு பெரியார்களுடைய நோக்கங்களைப் பார்த்தோம். நம் நாட்டுக் கவி ச்ரேஷ்டர் ரவீந்திரநாத் தாகூர் அறிவித்த கொள்கையைப்பற்றிக் கூறுவோம்.

## ரவீந்திரநாத் தாகூர்

இவர் மொழிந்த உபதேசம் உபநிஷத்துக்களில் காணப்படுகிற புராதனமான தத்துவந்தான். எல்லாம் ஆண்டவனுடைய அருள் வடிவமாகப் பாவிக்கவேண்டும். மனிதனுடைய பேதங்களைப் பெருக்குவதில் காரியமில்லை. தேசத்துக்குத்தேசம் சுவர்களை எழுப்புவதில் பயனில்லை. அகில பிரபஞ்சம் அன்பு மயத்தில் திகழவேண்டும். அது போவதற்கு "எனது உனது" என்ற மூலத்தைக் கிண்டிக் களைந்தெறிந்துவிடவேண்டும் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஆத்ம சக்தியைக் காண்பிக்கவேண்டும். என் உள்ளத்தில் எந்த அறிவுச்சக்தி அருவிபோல ஓடுகிறதோ, அதே சக்திதான் அகிலபிரபஞ்சத்தின் நடுவிலே ஓடுகிறது, என்று அவர் சொல்லுகிறார். அவ்வுணர்ச்சிக்கேற்ப ஜனசமுதாயத்தை அமைக்கவேண்டும் என்று அவர் கனவுகாண்கிறார்.

உள்ளத்திலே ஆசாபாசங்களை வைத்துக்கொண்டு, ஒரு அகிலதேச கூட்டம் கூட்டமுடியாது. எந்த கூட்டமும் பயன்படாது. ஆசைவெள்ளத்தை உள்ளத்திலே வற்றவைக்காமல், அதை ஓடவிட்டு, அணைபோட்டால் அணையைப்பிய்த்துக்கொண்டு அதிக வேகமாய் ஓடி உலகத்தை அழித்துவிடும் அவ்வெள்ளம். அகில தேசகூட்டத்தை அகிலதேசக் கொள்ளைக்காரர்கள் என்று சினந்து அவர் மொழிகின்றார்.

மேனாட்டில் 'முன்னேற்றம், முன்னேற்றம்' என்று சொல்லுகிறதெல்லாம் வெறுங்கதை; உண்மையான முன்னேற்றங்கிடையாது. அறிவு வளர்ந்ததே ஒழிய, அன்புபெருகவில்லை. அன்புமட்டும் போதாது, அறிவு வேண்டும். இவ்விரு அம்சங்களின் சேர்க்கையில்தான் உண்மையான நாகரிகம் உதயமாகும் என்று (Bertrand Russell) பெர்ட்ரான் ரசல் கூறுகிறார்.

ஆகாயத்தில் சஞ்சரிக்கிறோம்; நீர்மீது உலாவுகின்றோம்; ஆனால்சேர்ந்து வாழ்கின்ற தன்மையை இழந்துவிட்டோம். பௌதிக சக்திகளை அடிமைப்படுத்திவிட்டோம். என்று நினைக்கிறோம்; பௌதிகசக்திகள் நம்மை அடிமைகளாக ஆக்கிவிட்டன. மேனாட்டில் பௌதிக அறிவு வளர்ந்ததேயொழிய, உண்மையான மனப்பண்பில்லை. நம்முடைய அறிவாளிகளோ இருளுக்கப்பால் எழும் பரிதியின் சோதி-வெள்ளத்தைக்கண்டார்கள். அதைக்கவனிக்காமல் மின்மினிப்பூச்சி வெளிச்சங்காட்டுகிற மேனாட்டுநாகரிகத்திற்கும் நம்முடைய பாழும் மனம்செல்லுகிறது. பௌதிக சக்திகளைத் தக்கவழிகளிலே உபயோகப்படுத்த வழிதெரியாமல் தவிக்கிறார்கள். சக்திகளைக் குறைகூறுவதில் பயனில்லை. மனிதன் அவைகளை ஆளும் திறனற்றுப்போய் விட்டான். மனுஷ்யனுடைய மிருகத்தனம் மாறினால், அத்தனைச்சக்திகளும் அன்பு வழியில் திரும்பும்படிச் செய்யலாம். இப்பொழுது அவர்களுடைய நிலை, மனிதன் மனிதனை புசிக்கும் மேதைதான் (Intellectual cannibalism) என்று தோன்றுகிறது. சிறுகுழந்தையின் கைகளிலே கொலைக்கருவிகளைக் கொடுத்தால் தன் கைகளையும் வெட்டிக்கொள்ளும்; பிறரையும் வெட்டித்

காயனபடு, கீர்த்தனபடு, அபினவ
சரஸ்வதி, காலக்ஷேப திலகம்

ஸ்ரீமதி. ஸி. ஸரஸ்வதிபாய்

# ரஸிகர்களின் வேற்றுமை

**[இந்த ரஸமான கட்டுரையின் முதல் பகுதியை ஆண்டு மலரில் படித்து இன்புற்றீர்கள். அத்புதமான பிற்பகுதியை இங்கு கண்டு ஆனந்தமடையுங்கள்...ப-ர்.]**

ரஸிகர்கள் பொறுமையை இழந்தால் அவர்களுக்குமாத்திரம் கஷ்டம் என்று சொல்வதற்கில்லை. அதில் முதல் பங்கு, கச்சேரி காலக்ஷேபம் செய்யும் நமக்குத்தான்.

ஒரு ஸமயம் சிதம்பரத்திலிருந்து காலக்ஷேபத்திற்காக ஒரு தந்தி வந்தது. அதில் "இங்கு இந்த மீ 12ம்வ ஒரு காலக்ஷேபம் தேவை. ஸகல செலவடக்கம் என்ன துகை வேணும்! வடிவேலுப்பிள்ளை." என்று கண்டிருந்தது. வடிவேலுப்பிள்ளை என்பவர் ஒரு பிரஸித்தரான தனிகர். ரஸிகருங்கூட. அடிக்கடி அந்தப் பக்கம் நடக்கும் காலக்ஷேபங்களுக்கு வரக்கூடியவர். அந்த மரியாதையால் நாமும் ஆக்ஷேபனைக்கிடமில்லாமல் மிகவும் நியாயமாய் நமக்கு வேண்டிய துகையை தந்தியில் தெரிவித்தோம். அட்வான்ஸும் தந்தி மூலம் கிடைத்தது. நாம் ஸரியாய் அன்று காலை சிதம்பரம் போய் சேர்ந்தோம். வழக்கம்போல் ரயில் ஸ்டேஷனில் ஒருவர் வரவேற்றார். அப்பொழுது காலை 5 மணி இருக்கும். "அம்மா! இதோ சமீபத்தில் இன்ன இடத்தில் தங்குவோம். காபி பலகாரம் செய்து கொண்டு புறப்பட்டால் ஊர் சேர்ந்துவிடலாம்" என்றார். "எந்த ஊருக்கு. இந்த ஊரில்தானே கதை?" என்றேன். "இல்லை இல்லை. இதோ ஸமீபத்தில் ஒரு கிராமத்தில்" என்றார். 'ஸமீபம் என்றால் எவ்வளவு தூரம் இருக்கும்?' "எல்லாம் 10 மைலுக்குள்தான்" என்றார். இதைக்கேட்டதும் திடுக்கிட்டது.

அப்போதெல்லாம் டாக்ஸி பஸ் முதலிய துரிதப் பிரயாணம் செய்யக் கூடிய ஸாதனம் கிடையாது. மாட்டு வண்டியில்தான் போகவேணும். நல்ல கப்பி ரோட்டாயிருந்தால் ஜட்காவண்டியில் போகலாம். இவர் 10

---

தள்ளும். குழந்தைப் பருவத்தில் அவர்களிருக்கிறார்கள். அருள், அமைதி. சாந்தம், மனச்செம்மை என்று கீழ்நாட்டு அறிவு நிரம்பிய கிழ நாகரிகத்தின் பேச்சு அவர்கள் செவியில் ஏறுமோ? குழந்தைகள் குழந்தைக்ள்தான் கிழவர்கள் கிழவர்கள்தான்.

'அன்பின் அஸ்திவாரத்தின்மீது அறிவுக்கோயில் எழவேண்டும். தியாக மூலந்தான் மனிதன் இன்புறவேண்டும். இருளிலிருந்து ஒளிக்கு என்னை அழைத்துச்செல்' என்கிறார் அம் மஹாகவி. கல்வி கேள்விகளில் எழுந்த கனிதான் இன்பமாகும் என்று **கம்பன்** சொன்ன உபதேசத்தைத்தான் தாகூரும் கூறுகின்றார்.

**"ஏகம்முதற் கல்விமுளைத் தெழுந் தெண்ணில் கேள்வி
யாகம் முதற்றிண்பணை போக்கி யருந்தவத்தின்
சாகந்தழைத் தன்பரும்பித் தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலுமன்றே"**

வாழ்வே ஒரு நீண்ட கனவு; அக் கனவுக்குள் நல்ல கனவுகள் காண்பது நன்றல்லவோ! கனவுகள் உருவடைந்தால் என்ன? உருவடையாது போனால் என்ன? அவைகள் நக்ஷத்திரங்கள்போல விளங்கி இருள் அடைந்த நம் பாதைக்கு நல்ல வழிகாட்டிகளாய் நிற்கின்றன.

மைல் என்பது கடைசியில் 20 மைலாவது இருக்கும். அந்த இடம் சேரு வது எப்போ, கதை செய்வது எப்போ என்னும் விசனம் ஏற்பட்டது.

"அப்பா! எங்களுக்கு சிதம்பரம் வடிவேலுப்பிள்ளை வீட்டில் கதை செய்வதாய் பேச்சு. அவ்வளவு தூரம் கடினப் பிரயாணம் என்றால், ஒப்புக்கொண்டே இருக்கமாட்டோம். அல்லது தக்க சார்ஜும் செய்து, முதல் நாளேவந்து சேர்ந்து அதற்குத் தக்கபடி பிரயாணம்செய்திருப்போம். எதற்கும் தந்தி கொடுத்த ஸ்ரீ வடிவேலுப்பிள்ளை அவர்கள் வீட்டுக்கே போவோம். அங்கு நேரில் பேசுவோம்.'' என்று சொல்லி, அங்கு போய் சேர்ந்தோம். அவர் என்னைக் கண்டதும் ஆச்சரியப்பட்டு, "ஏது இவ்வளவு தூரம்வந்த விசேஷம்?''என்று கேட்டார். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. தந்தியைக் காண்பித்தோம். இதற்குள் கூட வந்தவர், 'இப்படி நம்மூர் பிள்ளைவாள் வீட்டில் கலியாணம். தங்கள் பெயரால் தந்தி கொடுத்தால் தான் இவர்கள் வருவார்கள் என்று அப்படிச்செய்தோம்' என்றார். "நீங்கள் அப்படிச் செய்யலாமா, அது சுத்த தவறு. மேலும் உங்கள் ஊர் பிர யாணம் செய்வது நம்மைப்போல் பழக்கமுள்ளவர்களுக்கே கஷ்ட மாச்சுதே. இவர்கள் எப்படி செய்வார்கள்? ஏதோ நல்ல விஷயமாயிருக் கிறது. நான் தடங்கல் செய்யவில்லை. ஆனால் இன்னும் ரூ. 200 சேர்த்து அவர்களுக்கு ஸம்பாவனை செய்யவேணும். எல்லா விஷயங்களும் மிகவும் மரியாதையோடு இருக்கவேணும் தெரிந்ததா? பிள்ளைவாளிடம் நான் கண் டிப்பாய் சொன்னதாய் சொல்லும். எனக்கும் அழைப்பு வந்திருக்கிறது. நான் டிஸ்திரிக்ட் போர்டு மீட்டிங்குக்குப் போகாவிட்டால் நானும் கட்டாயம் வருகிறேன். அம்மா! பிரயாணம் கொஞ்சம் கஷ்டம்தான். இருந்தாலும் இப்படி ஸம்பவித்துவிட்டது. இந்த அமிருதம் போன்ற கதையை அங் குள்ளவர்களும் கேட்டு ஆனந்திக்கட்டும். என் சொந்த குதிரை வண்டியை தங்களுக்குத் தருகிறேன். அதில் தாங்கள் பிரயாணம் செய்தால் கொஞ்சம் லகுவாயிருக்கும்'' என்று ஸமாதானப்படுத்தி பிராயணப்படுத்தினார். இதற் குள் காலை 8 மணியாகிவிட்டது. வைகாசியீ நல்ல வெய்யில். 11 மணி சுமாருக்கு காட்டுமன்னார்கோவில் வந்தது. அதுதான் சேரவேண்டிய இடம் என்று நினைத்தேன். அங்கு நாலு மாட்டுவண்டிகள் தயாராயிருந் தன. வந்தவர் "அம்மா! இனி குதிரைவண்டிகள் போகாது. இதோ இந்த மாட்டுவண்டியில் ஏறுங்கள்'' என்றார். ஏறினோம். ஒரு வாய்க்கால்கரையில் போகிறது. சக்கரம் ஒரு அங்குலம் இப்படி நகர்ந்தால் வாய்க்காலில் வண்டி விழவேண்டியது. அப்படி நகர்ந்தால் வயல் பள்ளத்தில் விழவேண்டியது. நொடியோ சொல்லவேண்டியதில்லை. எதிர்வண்டிவந்தால் சொல்லவே வேண்டாம் கஷ்டம். எறும்பு ஊருவதுபோல் தான் வண்டி நகருகிறது. இப்படி சுமார் 2 மைல் போச்சு. இதற்குள் ஒவ்வொரு க்ஷணமும் எனக் கிருந்த திகில் என் மார்பையே உடைத்துவிட்டது. வந்தவர், "அம்மா! இறங்குங்கள். இந்த வாய்க்காலைத்தாண்டி அக்கரை செல்லவேணும்'' என்றார். அப்படியே பரிசில் ஏறி அக்கரைசென்றோம். அங்கிருந்து ஒரு ஒத்தையடிப்பாதை வழியாய் ஒருமைல் தூரம் அந்த வெய்யிலில் நடந் தோம், எப்படியோ ஊர்வந்து சேர்ந்தோம். அது மிகவும் சின்ன கிராமம். நம்மை வரவழைத்த பிள்ளை வீடு மாத்திரம்தான் ஏதோ ஒரு மாதிரியான ஓடு வீடு. மற்றவையெல்லாம் கூரைவீடுகள்தான். அங்குள்ளவர்களும் பரம அநாகரிகமானவர்கள். இதற்குள் 1 மணியாகிவிட்டது. அந்த ஊரில் அக்ரஹாரம் என்று கிடையாது. சின்னதாய் ஒரு புரோகிதர் வீடு. அதில் நம்மை இறக்கினார்கள். நம்மைக்கண்டபிறகே அவர்களும் சமைக்க ஆரம்பித்தார்கள். எப்படியிருக்கும் நம்முடைய ஸ்திதி? இக்கதையை

வாசிக்கும் நீங்கள், வெகு ஸுலபாய் அங்கங்குசென்று, பணத்தைக் கொட்டிக்கொண்டு வந்துவிட்டோம் என்று நினைக்கமாட்டீர்களே. பசியோடு தவிக்கிறோம். எப்படியோ ஸ்நானம் செய்தோம். 3 மணி சுமாருக்கு ஏதோ மாதிரியான சாப்பாடு கிடைத்தது. இதற்குள் கலியாண ஸொந்தக்காரர் வந்தார். 200 ரூ. அதிகம் செய்ததைப்பற்றி கொஞ்சம் வாதம் நடந்து, பிறகு ஒப்புக்கொண்டார், என்னகதை செய்யலாம் என்று பிரஸ்தாபம் வந்தது. யாரோ ஒரு முக்கியஸ்தர் கதைக்கு வருவதாய் சொல்லியனுப்பியிருக்கிறார். அவரைக் கேட்டுத்தான் சொல்லவேணும் என்று சொல்லிவிட்டார் வீட்டுக்காரர். கலியாணக்கொட்டகைக்குப் புறப்பட்டோம். மணி 4-க்கு ஆரம்பித்து 7½ அல்லது 8 மணிக்கு நிறுத்துவதாய் ஏற்பாடு. 5 மணியாகியும் அவர் எதிர்பார்க்கும் மனிதர் வரவில்லை. ஏதாவது கதை செய்துவிடுவது என்று தீர்மானமாச்சுது.

அங்கு சேர்ந்தவர்களில் பல அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. ஒருவர் ஸீதா கலியாணம். மற்றொருவர் வத்ஸலா கலியாணம். இன்னொருவர் வள்ளி கலியாணம். வேறொருவர் ருக்மிணீ கலியாணம். சிலர் நந்தன் சரித்திரம். இப்படி கூச்சல் கிளம்பித்து. இதில் ஒரு வக்கில் வந்திருந்தார். அவர் எல்லோரையும் அடக்கி, "ஐயா, உங்கள் கலியாணப் பெண் பெயரென்ன?" என்று கேட்டார். அவர் 'ராதை' என்றார். 'ஆனால் ராதா கலியாணம் நடக்கட்டுமே' என்றார். நான் குறுக்கிட்டு, 'அது நான் செய்யும் பழக்கமுள்ள சரித்திரமல்ல' என்றேன். ஆனால் மாப்பிள்ளை பெயரை அனுசரித்தாவது கதை செய்யலாமே என்றார் மற்றொருவர். மாப்பிள்ளை பெயர் சிவராமகிருஷ்ணன். இதில் சிவன் கதையைச் செய்வதா, ராமன் கதையைச் செய்வதா, கிருஷ்ணன் கதையைச் செய்வதா? சர்ச்சை நடந்தது. கடைசியில் ஒரு அநுபவமுள்ள வயோதிகர், அந்தப் பெயரில் கிருஷ்ணன் என்று முடிவதாலும், பெண் பெயர் ராதை என்று இருப்பதால் ராதைக்கும் கிருஷ்ணனுக்கும் சம்பந்த மிருப்பதாலும், கிருஷ்ண ஸம்பந்தமான சரித்திரமே நடக்கட்டும் என்று தீர்மானித்தார். நானும் ஏதோ ஒரு முடிவுக்கு வந்ததே என்னும் ஸந்தோஷத்தோடு, ருக்மிணீ கலியாண கதையை செய்யத் தீர்மானித்து, அதற்கு வேண்டிய நாம ஸித்தாந்தத்தையும் சொல்லி, கதைக்கு ஆரம்பித்துவிட்டேன். 'ஸிதாமாதிபதி பீஷ்மகன், ஸ்ரீ கிருஷ்ணனுக்கு தன் பெண் ருக்மிணியைக் கொடுப்பதாய் ஸபையில் தீர்மானித்ததை, அவள் தமயன் துராத்மா ருக்மி, அதைத் தடுத்து சேதி தேசாதிபதியான சிசுபாலனுக்குத்தருவதாய் தீர்மானித்து விட்டான்.' என்று சொல்லிக்கொண்டு வருகிறேன். இதே சமயம் கலியாண வீட்டுக்காரர் எதிர்பார்த்திருந்த பெரிய மனிதரும் வந்தார். அவருடைய ஆகாரத்தையும் வேஷத்தையும் டம்பத்தையும் கவனித்தேன். ருக்மிணியின் தமையன் ருக்மி இப்படித்தான் இருந்திருப்பான் என்று எனக்கு ஒரு தோற்றம் உண்டாயிற்று. எல்லோரும் மரியாதை செய்தார்கள். நானும் பயத்தால் மரியாதைசெய்தேன். அவர் வந்த ஆரவாரம் அடங்கியதும், 'என்ன கதை நடக்கிறதோ'! என்று கம்பீரமான தோரணையில் கேட்டார். யாரோ ருக்மணீகலியாணம் என்றார்.

ருக்மணீகலியாணம் தேவையில்லை; நந்தன் சரித்திரம் செய்யட்டும் என்று ஆர்ப்பரித்தார். நான் இவரை ருக்மி என்று நினைத்தது ஸரியாகி விட்டதே. அந்த ருக்மி, ருக்மிணிக்கும் கிருஷ்ணனுக்கும் நடக்கும் கலியாணத்தைத் தடுத்தான். இந்த நான் நினைத்த ருக்மி, நான் செய்யும் ருக்மிணீ கலியாணத்தைத் தடுத்தான். ஆனால் அங்கு அவன் தடுத்தபடி நடக்காமல் கடைசியில் ருக்மிணிக்கும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் விவாகம் நடந்தேவிட்டது.

இந்த ருக்மியால் ருக்மிணீகலியாணம் நின்றேவிட்டது. மத்தியில் பலர் ஆரம்பித்த கதையை பாதியில் விடலாமா என்றார்கள். நந்தன் சரித்திரமென்ன, ருக்மணீகலியாணம்தான் நடக்கட்டுமே என்றும் பிடிவாதம் செய்தார்கள். வந்தவர் ஒன்றையும் கேட்பதாயில்லை. ஒரேபிடிவாதமாய் நந்தன் சரித்திரம்தான் நடக்கவேணும் என்று சொல்லிவிட்டார். பிறகு நான் ஸபையோரை மிகவும் வேண்டி, ஸமாதானப்படுத்தி, ருக்மணீகலியாணத்தில் விட்ட கதையைத்தொடங்கி, "பிறகு இந்த வர்த்தமானத்தை ருக்மிணி ஸகியின் முகத்தால் அறிந்து, தக்க உபாயத்தை யோசித்து, ஒரு பிராமணனிடம் ஒரு பத்திரிகை எழுதிக்கொடுத்து, கிருஷ்ணபகவானை வரவழைத்தாள், தான் பூஜைக்காக காளிகோவில் சென்று திரும்பும்பொழுது, பகவான் ருக்மிணியை அபகரித்து, ரதத்தில் ஏற்றிக்கொண்டு, தன்னை எதிர்த்த ஜராஸந்தன், சிசுபாலன் முதலியவர்களைத் துரத்திவிட்டு, ருக்மியையும் தக்கபடி அவமானப்படுத்தி, த்வாரகை சென்றார். பிறகு ருக்மணிக்கும் பகவானுக்கும் மிகவும் விமரிசையாய் விவாகம் நடந்தது. இந்தக் கலியாண ஸமயம் நடந்த பல விசேஷங்களில் நந்தன் சரித்திரம் ஹரிகதையும் நடந்தது. அதேப்படி, நந்தன் சரித்திரமானந்தம்" என்று ஆரம்பித்து நந்தன் சரித்திரம் செய்தேன். எப்படி யிருக்கிறது ரஸிகர்களின் வேற்றுமை? அதினால் நமக்கு ஏற்படும் கஷ்டம். இதோடு என் தொல்லை தீர்ந்ததா - நந்தன் சரித்திர எதிர்ப்பாளரில் ஒருவர் சரித்திரம் முடிந்ததும் 'ருக்மணிக்கும் கிருஷ்ணனுக்கும் நடந்த கலியாண வைபவத்தில் நந்தன் சரித்திர கதையை பாகவதர் செய்வதாய் சொன்னீர்களே. ருக்மணீ கலியாணம் நடந்தது த்வாபரயுகத்தில். நந்தன் வர்த்தமானம் இக் கலியுகத்தில்தானே நடந்திருக்கிறது. அந்த ஸமயம் இந்த கதையை எப்படிச் செய்திருக்க முடியும்? என்று, எழுந்து உரக்கக் கேட்டார். ஜனங்களும் கொல்லென்று சிரித்தார்கள், பிறகு நான் ஜனங்களை அடக்கி மெதுவாய் தெரிவித்தேன். "ருக்மிணீ கலியாணம் முதலிய தெய்விக சரித்திரங்கள் என்று நடந்ததோ அன்றே நடந்தது என்று கணக்கல்ல. மனிதர்களுக்கு கலியாணம் என்றால் என்று நடந்ததோ அன்றோடு ஸரி. தேவர்கள் கலியாணம் அப்படியல்ல. அவர்கள் நித்ய கலியாண மூர்த்திகள். இன்று அவர்கள் கலியாண வைபவத்தை நடத்தினோம். இன்றும் ருக்மணிக்கும் கிருஷ்ணனுக்கும் விவாகம் நடந்தது என்றே நினைக்கவேண்டும். அப்படி இன்று இந்தக் கொட்டகையில் நடந்த ருக்மணி கலியாண வைபவத்தில் நந்தன் சரித்திரம் நடந்தது என்றால் இது உண்மைதானே!" என்றேன். அதற்கும் ஜனங்கள் சிரித்தார்கள். பிறகு எனக்கு ஸரிவர ஸம்பாவனையாகி, மறுபடி இவ்வளவு வேதனையையும் கடந்து சிதம்பரம் நான் அடைந்தது, நந்தன் பிராமணனிடம் விடுதலைபடைந்து சிதம்பர க்ஷேத்திரமடைந்ததுபோல் ஒரு பெரிய கதை யென்றே சொல்லலாம்.

இதில் ரஸிகர்களின் வேற்றுமையைப்பற்றின ஸங்கதி குறைவாயிருந்தாலும் நிகழ்ந்ததை அப்படியே எழுதியிருக்கிறேன். வாசகர்கள் மன்னிக்கவும்.

---

## ஸிலோனிலுள்ள

சந்தாநேயர்கள் 15-தேதிக்குள் சஞ்சிகை கிடைக்காவிடில் உடனே தெரிவிக்கவும். அடுத்த மாத சஞ்சிகை வந்தபிறகு எழுதினால் இனமாக அனுப்பமுடியாது.

---

# பக்தியின் மகிமை

சுமார் 15 வருஷங்களுக்குமுன்பு நானும் என் கணவரும் பூலோக வைகுண்டமாகிய ஸ்ரீரங்கத்திற்குப்போயிருந்தோம். ஸ்ரீ வைகுண்டநாதனாகிய அழகிய மணவாளனை ஆனந்தமாகத் தரிசித்துவிட்டு கோயில் பூராவும் உள்ள அழகுகளைப் பார்த்துக்கொண்டும் மற்ற சன்னிதிகளில் ஸேவித்துக்கொண்டும் ப்ரதக்ஷணமாக வந்தோம்.

அப்போது மாலை நேரமாதலால் பக்த கோடிகள் ஒவ்வொருவராக வந்துகொண்டிருந்தார்கள். "நாம் இறந்துவிட்டால் எமன் நம்மைப் பல கேள்விகள் கேட்பானும். அதில், "இலை தைக்கத்தெரியுமா! அம்மானை ஆடத்தெரியுமா! கள்ளறை வெள்ளறை கண்டாயா! அஞ்சுக்குழி மூணு வாசல் கண்டாயா!" என்பவைகள்போல் பல கேட்பானும்.

முதல் கேள்விக்குத் தெரியாதென்ருல் எமன் நெல்லி இலையும், நுகத் தடியும் கொடுத்துத் தைக்கச்சொல்வானும். இரண்டாவது தெரியாதென்ருல் பெரிய மலையையும் கடுகையும் சேர்த்து அம்மானை ஆடச்சொல்வானும். ஆகையால் அவைகளைக் கற்றுக்கொள்ளுங்கள்" என்று பாட்டிமார்கள் பயமுறுத்தி இலை தைக்கவும் விளையாட்டில் கஷ்டமான அம்மானை ஆடுவதையும் கற்றுக் கொடுத்துவிடுவார்கள்.

மற்ற கேள்விகள் பக்தியை உண்டாக்குவதற்கே அமைந்தனவாகும். நாங்கள் அந்த அஞ்சுக் குழி மூன்று வாசலைப் பார்க்கும்போது எனக்கு மேற்குறித்த வாக்யங்கள் ஞாபகத்திற்கு வந்தன. "பக்தியில் எப்போதும் இருவகைகள் உண்டு. படித்துப் படித்து விஷயத்தை அறிந்து ஆராய்ச்சி செய்து பக்தியிலிடுபடுகிறவர்கள் எதையும் எளிதில் நம்பமாட்டார்கள். ஆதாரமிருக்கிறதா என்று தான் முதலில் தேடுவார்கள். பகவான் என்கிற பெயரையும் அவனது அரிய லீலைகளையும் கேட்ட உடனே; மூடபக்தியுள்ளவர்கள்தான் நிச்சயபுத்தியுடன் நம்பிவிடுவார்கள். அவர்கள் அபாரமான விஷயங்களை அறியவில்லை என்ருலும் பக்தி என்கிற ஒரே நம்பிக்கையால் அவர்களும் உயர்ந்த பலனைத்தான் அடைவார்கள்" என்று நாங்கள் பேசிக்கொண்டுவரும்போது வடக்கத்தி தெலுங்கர்கள் திருப்பதிக்குப் போய் ப்ரார்த்தனை செலுத்திவிட்டு மொட்டைத்தலையும் மஞ்சள் உடையுமாய் மெய்மறந்த ஆனந்தத்துடன், "கோவிந்தா! கோவிந்தா!" என்று கூச்சலிட்டுக்கொண்டு ஒரே பட்டாளம்போல் வந்தார்கள். அவர்களைப் பார்த்தவுடனே எனக்கு ஏதோ தோன்றியது. "மூடபக்தியின் நம்பிக்கையை இதோ இப்போதே ஒரு சிறிய தமாஷ் பரிக்ஷையில் பார்த்துவிடலாம். நீங்கள் சிரிக்காமலிருங்கள்" என்று என் கணவரிடம் சொல்லிவிட்டு அங்கிருந்த ஒரு தூணை நான் சுற்றி வலம் வருவதும் தூணில் என் தலையை 'நெருக்கு நெருக்கு' என்று முட்டிக்கொள்வதுமாக நாலைந்து முறை செய்தேன். என் கணவருக்கு வந்த சிரிப்பை அடக்கமுடியாது தவித்தார்.

183088

இதற்குள் அந்த யாத்ரீகர்கள் என் சமீபத்திற்கு வந்துவிட்டார்கள். அவர்களில் வயது முதிர்ந்த ஒரு கிழவி என்னைப் பார்த்து, "அம்மா! இதில் என்ன விசேஷம்? இப்படிச் செய்கிறீர்களே!" என்று தெலுங்கில் கேட்டாள். நானும் வெகு பக்தியுடன் [illegible], "ப்ரகலாத சரிதையை வெகு சுருக்கக் கூறி, அந்த நரஸிம்மர் அவதாரம் செய்த கம்பம் இது

ஸ்ரீமதி. வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

# "கன்னுபிடி வெச்சேன்"

சூரிய உதயத்தின் அழகு கண்களைப் பறிக்கின்றது. சூரிய கிரணங்கள் குளத்தில் இருக்கும் ஜலத்தை வெள்ளிபோல் மின்னச் செய்தன. அந்த அழகிற்கு அழகு செய்தாற்போல் குளத்தங்கரையில் கிழவி முதல் சிறு குழந்தைகள் வரையில் புது ஆடைகளும் ஆபரணங்களும் அணிந்து காக்ஷி அளித்தது அற்புதமாய் இருக்கிறது. ஒவ்வொருவரும் "கன்னுபிடி வேச்சேன், காக்காபிடி வேச்சென் காக்காயிக்கும்; குருவிக்கும் கல்யாணம்" என்று சொல்லிக்கொண்டே பிடி வைக்கிறார்கள். அவர்கள் வைப்பதற்குள் காக்காய்களும் குருவிகளும் வைக்கவிடாமல் அவர்களை வட்டம் இட்டுக்கொண்டிருந்தன. இதையெல்லாம் அங்கு இருக்கும் மரத்தின்மேல் ஒரு கிளி உட்கார்ந்து உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தது. அதன் முகத்தில் ஆத்திரம் தாண்டவமாடுகிறது. காக்காய்கள் பறந்து பறந்து சாப்பிடுவதைப் பார்த்ததும் இன்னும் ஆத்திரம் தீபோல் மூண்டது.

"ஆம் நாம்பளும் பக்ஷி பறவை ரகத்தில் சேர்ந்தவர்கள்தானே. நம்ப எல்லோரையும் விட்டு விட்டு காக்கை, குருவியை மாத்திரம் ஏன் அழைத்து அன்னம் இடுகிறார்கள்? அவர்கள் மாத்திரம் என்ன அவ்வளவு உயர்வு, நாம்பள் என்ன அவ்வளவு தாழ்வு! இருக்கட்டும். எல்லா பக்ஷி இனங்களையும் கூட்டி ஒரு மஹா சபை சேர்த்து, இதை தீர விசாரிக்காமல் விடுவதில்லை" என்று ஆத்திரத்தோடு புறப்பட்டு எங்கெங்கும் இருக்கும் பக்ஷிகளையெல்லாம் கூப்பிட்டு குளத்தங்கரையில் இருக்கும் மரத்தடியிலே மாபெருங் கூட்டம் கூட்டியது. பக்ஷிகளில் சிறந்தது கருடனுகையால் அது தலைமை வஹித்தது. கிளிக்கு ஆத்திரம் தலைக்கேறி சபை நடுவில் வந்து நின்று "மஹா பெரும் கூட்டத்திற்கு என் வந்தனங்கள். நான் சொல்லப் போகும் விஷயம் எல்லோருக்கும் ஆத்திரத்தைதான் மூட்டும். மஹா ஜனங்கள் பக்ஷி இனங்கள் அனைவரையும் விட்டு காக்கை குருவி இருபாலரை மாத்திரம் ஏன் அத்தனை சிறந்ததாகக் கருதி கனுவுப்பண்டிகையன்று அழைத்து அன்னமிடுகிறார்கள். நம்மைவிட எந்த விஷயத்தில் காக்கை சிறந்தது. நம்மைதான் ஒவ்வொரு ஆழ்வாராதிகளும் பாடி இருக்கிறார்கள். பகவானுக்கு நம்மைதான் தூதும் அனுப்புகிறார்கள். கோதை நாச்சியாரோ எப்பொழுதும் நம்மை கையிலேயே உட்காரவைத்துக்கொண்டிருக்கிறார். அழகு எடுத்துக்கொண்டாலும் நாம்தானே சிறந்து விளங்குகிறோம்.

---

தான் என்று பெரியவர்கள் கூறுவது ஐதீகம்; இதை ப்ரதக்ஷணம் செய்து தலையை முட்டினால் நமது பாபமெல்லாம் பறந்துவிடும்" என்று கூறினேன்.

அவ்வளவுதான். அவர்களுடைய பக்தி வெள்ளம் கரைபுரண்டது. குழந்தைகுட்டி முதல் கம்பத்தை ப்ரதக்ஷணம் செய்து மொட்டைத் தலையை 'டங்கு, டங்கு' என்று இடித்துக்கொள்ளும் காக்ஷியைக்காண ஒருபுறம் அடங்காத சிரிப்பும், ஒருபுறம் அவர்களின் பரிசுத்தமான நம்பிக்கையும் பக்தியுங்கண்டு சந்தோஷமும் பொங்கின.

ஊர்க்காரர்கள் இந்தமாதிரி யார் செய்யச்சொல்லியது என்று கேட்டு உண்மை எங்கு வெளியாகிவிடுமோ என்கிற பயம் வேறு வந்து சூழ்ந்தது. நான் செய்தது குறும்போ, குற்றமோ, பாவமோ என்னைத் திட்டாதீர்கள். அது ஈசனுக்கே அர்ப்பணம்! பக்தியின் நம்பிக்கையை கண்கூடாகக் கண்டதுமட்டும் மனச்சாந்தியாகவே இருக்கிறது. அக்காட்சி இன்னும் என் கண்முன்பு தாண்டவமாடுகின்றது.


அது கன்னங்கரேலென்று எத்தனை விகாரமாய் இருக்கிறது. அதுவும் அல்லாது லோகமாதாவையே தன் மூக்கால் குத்தி பகவானிடம் தண்டனை பெற்று ஒரு கண்ணையும் போக்கிக்கொண்டு தலை சாய்த்து சாய்த்து பார்த்துக்கொண்டு எவ்வளவு கோரமாய் இருக்கிறது. அப்படி இருந்தும் அதற்கும், அற்பமான குருவிக்கும் ஏன் ப்ரதானம் தந்து இருக்கிறார்கள். இதற்கு ஒரு வழிசெய்யாமல் விடக்கூடாது" என்று எதை எதையோ பேசிவிட்டு உட்கார்ந்தது.

அதன்பிறகு ஒவ்வொரு பக்ஷியாக ப்ரஸங்கம்செய்ய ஆரம்பித்தது. ஹம்சம் எழுந்து 'நான் ஒன்றுன சரஸ்வதிக்கே வாஹனமாய் இருக்கிறேன். அதுவும் இல்லாமல் தமயந்தி என்னைதானே காதல் தூது அனுப்பினுள்! என்னைவிட அது என்ன சிறந்தது!" என்றது. சேவல் எழுந்து "நான் முருகரின் கொடியிலேயே இருக்கிறேன். நான்தானே ஜனங்களை தூக்கத்திலிருந்து எழுப்புகிறேன்" என்று பெருமை அடித்துக்கொண்டது. மயிலோ 'நான் ஒன்றுன முருகனுக்கே வாஹனமாய் இருக்கிறேன். பகவானே என்மேல் ஏறும்பொழுது என்னைவிட பாக்கியசாலி யார் இருக்கிறார்கள்?' என்றது. குயில் "என் இசையில் உலகமே மயங்கி விடுகிறது. ஒவ்வொரு கவியும் என்னைப்பாடி இருக்கிறார். என்னை விட உயர்வு யார்" என்று பெருமை அடித்துக்கொண்டது. நாரையோ என்னைவிட பாக்யசாலி யார்? என்னை எத்தனையோ கவிகள் தூதுவிட்டிருக்கிறார்கள்" என்றது. ஒவ்வொருவரும் தனக்குத் தோன்றியவாறெல்லாம் தொண்டை கிழியக் கத்தி உட்கார்ந்துகொண்டார்கள்.

கடைசியில் கருடன் எழுந்து வெகு சாந்தத்துடன் பேச ஆரம்பித்தது. "சபையோர் அனைவருக்கும் என் வந்தனங்கள். இதுவரையில் ஒவ்வொருவரும் பேசி தங்கள் ஆத்திரம் எவ்வளவுதூரம் இருக்கிறதென்று காண்பித்துவிட்டீர்கள். ஆனால் நான் இப்பொழுது பேசப்போவதைக் கேட்டு எல்லோருக்கும் ஆச்சர்யமாகவும், ப்ரமிப்பாகவும் கட்டாயம் இருக்கும். மஹாஜனங்கள் நம்பளுக்கு ஒரு கௌரவப்பதவியைக் கொடுத்துதான் வருகிறார்கள். நீங்கள் தெரிவித்தாப்போல் அனைவரும் ஒரு உன்னத ஸ்தானத்தை அடைந்தவர்கள், நானே விஷ்ணுபகவானுக்கே வாஹனமாய் இருக்கிறேன். நம்மை ஒவ்வொரு ஆழ்வார்களும் பாடியிருக்கிறார்கள். காக்கை, குருவியை எந்த ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள்? காக்கை பகவானிடமே அபராதம் பெற்றது. ராக்ஷஸவர்க்கத்தில் சேர்ந்தது.ராக்ஷஸவர்க்கம் எவ்வளவுஇழிவானது. காக்கைநவக்ரஹங்களில் ஒன்றுன சனிபகவானுக்குதான் வாஹனமாய் இருக்கிறது. அவ்வளவு இழிவான ராக்ஷஸவர்க்கத்தில் சேர்த்ததனுல்தான் போனுபோகிறதென்று வருஷத்திற்கு ஒருநாள் சாதம்வைக்கிறார்கள். திவஸத்தன்று ஹாய் ஹாய் என்று கூப்பிட்டு திவஸஸாதம் போடுகிறார்கள். நாம்பள் கௌரவப்பட்டவர்களானதால்தான் நம்மை அவர்களும் கௌரவிக்கிறார்கள். இதன் அர்த்தம்தெரியாது ஒவ்வொருவரும் ஜனங்களை பழித்தீர்கள்" என்று இன்னும் எதை எதையெல்லாம் பேசிவிட்டு உட்கார்ந்தது. அதன் பிறகுதான் ஒவ்வொன்றுக்கும் தன் கௌரவம் தெரிந்து மனிதர்களை புகழ்ந்தது. இதையெல்லாம் ஆச்சர்யத்துடன் பார்த்துக்கொண்டிருந்த காக்கை, குருவிவர்க்கங்கள் பெருமூச்சு விட்டன. சபையில் இருக்கும் பக்ஷிகள் கருடனைப்புகழ்ந்து சந்தோஷ ஆரவாரம்செய்தன. அந்த சபையில் ஒரே குதூகலமும் கொண்டாட்டமும் குடிகொண்டன. எல்லா பக்ஷிகளும் தம் பெருமையை நினைத்து சந்தோஷத்துடன் தங்கள் கூடுகளை நோக்கி பறக்க ஆரம்பித்தன.




தைப்பூசத்தன்று விவசாயிகள் தாம் பயிரிட்டு அறுவடை செய்த தானியங்களை பயபக்தியுடன் பகவானுக்குச் சமர்ப்பிக்கும் காக்ஷியைக் காணப் பரவசமாகிறதல்லவா ?




முன்காலத்தில் பெண் புக்ககம் போவதென்றால் பெண்ணும் பெண்ணைச்சேர்ந்தவர்களும் ஒரே அழுகை, பிரிவாற்றாமையின் பரிதாபம் சொட்டும். இக்காலத்திலோ, பெரும்பாலான இடங்களில் இன்று கல்யாணமானால் நாளையே புதிய தம்பதிகள் ஜாம்ஜாமென்று டில்லி, ஸிம்லா, கல்க்த்தா முதலிய தூர தேசங்களுக்கு பிரயாணமாகிவிடுகிறார்கள்.

# க்ஷேமலாபங்கள்

அன்பர்களே!

இறைவனருளால் பொங்கல் பண்டிகையன்று மங்களகரமாகப் பால் பொங்கி வழிந்ததென்று நம்புகிறேன். மோகினியின் மலரை மிகவும் பாராட்டி நீங்கள் அன்புடன் அளித்துள்ள புகழ்மாலையை மோகினி ஆனந்தமாகச் சூட்டிக்கொண்டுவந்து உங்களுக்குக் காட்சியளிக்கிறாள். இத்தனை ஸ்த்ரீ எழுத்தாளர்களின் திறமையை ஒரே மலரில் வெளியிட்டிருப்பது எல்லோருக்கும் ஆச்சரியத்தையும், திருப்தியையும் கொடுத்திருக்கிறது. இதைக் குறித்தே பெரும்பான்மையான பாராட்டுக் கடிதங்கள் வந்துள்ளன. மலரிலுள்ள விஷயங்களையே ஒரு கட்டுரையாகத் தொடுத்து சில அன்பர்கள் அனுப்பியிருப்பது மிகவும் போற்றத்தக்கது. பாராட்டு அனுப்பியுள்ள எல்லோருக்கும் எனது வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் தனித்தனியாயும், சேர்த்தும் எழுதியுள்ள எல்லாவற்றையும் ப்ரசுரிப்பதென்றால் மற்றொரு மோகினி இதழளவு பெருகும். மலரின் அட்டைப் படத்து அழகை வர்ணித்துப் பலபேர் எழுதுகிறார்கள். 'அந்தக் கண்ணன் வாயைத் திறக்கும் அழகையும், யசோதையின் ரூபத்தையும் எப்படித்தான் வர்ணிக்கமுடியும்' என்று மயங்குகிறார் ஒரு சகோதரி. மலரைப்பற்றி வரும் புகழ்முற்றும் மலரை அலங்கரித்துள்ள எழுத்தாளர்களுக்கும், சித்திரக்காரர்களுக்கும், இரவு பகல் உழைத்து அதை உருப்படியாக்கிய தொழிலாளர்களுக்குமே உரித்தாகும்.

அன்பர்களில் பலர் - முக்கியமாக பேப்பர் வியாபாரிகள் சிலரும், பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் சிலரும்-மலரில் உபயோகித்துள்ள கையினால் செய்த பேப்பரையும், மிகத் தெளிவாக அதில் அச்சிட்டிருப்பதையும் மிகமிகப்பாராட்டி எழுதியிருப்பதோடு "மலர் முற்றிலுமே இதே பேப்பரில் வந்திருக்குமாயின் அது ஒரு தனிச்சிறப்பைப்பெற்று தனிப்புகழுடன் விளங்கி இருக்குமே." என்றும் தெரிவித்திருக்கிறார்கள். நாம் முதலில் மேல்குறித்த எண்ணத்துடன்தான் கையினால் பேப்பர் தயார் செய்யச் செய்தோம். மலருக்குவேண்டிய அளவு தயார்செய்யமுடியாது போனதால் கிடைத்ததை முழுதும் மலருக்கே உபயோகித்தோம்.

ஏராளமான சந்தாநேயர்கள் ரிஜிஸ்தர் போஸ்டில் அனுப்பும்படி பணம் கட்டியிருந்தார்கள்: கிராமத் தபாலாபீசாகையால் எல்லோருக்கும் ஒரே தினத்தில் அனுப்பமுடியவில்லை. ரிஜிஸ்ட்ரேஷனுக்காகப் பணம் கட்டாத எல்லோருக்கும் ஸர்டிபிகேட் ஆப் போஸ்டிங்கில்தான் அனுப்பினோம். தினமும் எவ்வளவு அதிகமாக அனுப்பமுடியுமோ அவ்வளவு அனுப்பினோம். சிறிய ஸ்டேஷனாகையால் ஏஜன்டுகளுக்கனுப்பும் பார்சல்களையும் தினம் கொஞ்சமாகவே அனுப்பமுடிந்தது. அப்படியும் 10உ வரை ஆயிற்று. தாமதத்திற்கு மன்னிக்கவும்.

உங்கள் நன்றியுள்ள,

வை. மு. கோதைநாயகி.

---

## சந்தாநேயர்கள் கவனிக்கவும்

1. உங்கள் விலாசத்தில் மாறுதல் ஏற்பட்டால் 28-ந் தேதிக்குள் தெரிவிக்கவும்.

2. இந்தியாவிலுள்ளவர்களுக்கு 10 தேதிக்குள் சஞ்சிகை கிடைக்காவிடில் உடனே எழுதவும். அடுத்த இதழ் வந்தபிறகு எழுதினால் இனமாக அனுப்ப முடியாது.

3. உங்களது சந்தா ஆண்டு முடிவுவரை இல்லாவிடில், பாக்கியை உடனே அனுப்பினால், சஞ்சிகையை தொடர்ச்சியாக அனுப்பமுடியும். மானேஜர்.

# மலர் மாலை

ஸ்ரீமதி. எம். எஸ். கமலா

## உன் பிரார்த்தனை பலித்ததா! எப்படி ?

அருமை நேசி! கற்பகம்!

"நீ என்ன எழுதினாய்? 'நீ எவ்வளவு நாள் பேசாமடந்தையாய் இருப்பாய்? ரஸிகத்தன்மையே உன்னிடமில்லையா?' என்றெழுதினாய்.

'நான் ரஸிப்பது' 'தெருக்கூத்தி'லிருக்கும் 'அலங்காரமுறைகள்' 'ஹரிஜனங்களும், ஸ்ரீவைஷ்ணவமும்' என்பதைப்பற்றி யோசித்து யோசித்து 'ஏழரைநாழிகை சனி'யிலிருந்து 'தலைவலி' எடுக்காமல் 'உண்மை சிநேக'த்தால்'விடுதலை' பெற்று 'மைலாப்பூர்-ஸெண்ட்ரலில்' இறங்கினேன். 'நடைவழி'யில் 'தீர்க்கதரிசிகளை' சந்தித்து 'என் சகோதரி'யால் 'விஜயசண்டின் சமாதி'யின் 'ஸ்தலமகிமை'யை அறிந்து 'எங்கள் சமஸ்தான'த்தில் நுழைந்து 'பண ஆசை யாருக்கு' என்று கேட்டு 'வித்தியாச'மில்லாமல் 'பௌத்திர பாக்கியங்க'ளுக்கு 'படமும் பக்தி'யும் நிறைந்த கவிதைகளுடன் 'கம்ஸனின் சிந்தனை' 'கண்ணகியின் சக்தி' முதலிவைகளை 'களிப்பும் கண்ணீரும்' உகுத்துக்கொண்டே 'தீராத விளையாட்டுப்பிள்ளை'க்கு 'பிரேமஜாவின் பிரேமை'யை சொல்கிறேன்.

'வாழ்க்கையின்ப'த்தில் 'கண்ணன்வருவான்' 'ராதாகிருஷ்ணன்' போல் 'நாமும் நமது இசையும்' சேர்த்து 'மந்த்ரஸ்தாயி'யில் 'அர்ச்சாவதாரம்' 'ஸ்ரீவைஷ்ணவம்' என்னும் 'கானம்ருதத்தை' தரங்கிணி'யால் தட்டி எழுப்புவேன்.

'அற்புதம் எது?' என்றால் 'குடியரசுக்கோள்கைகளை'ச் சொல்லி 'ரஸிகர்களின் வேற்றுமையை' யறிந்து 'உணவுப்பொருள் அபிவ்ருத்தி' செய்து 'அன்பின்ஜ்வாலை'யிலிருந்து 'சமூகச்சுடரை' மேலுக்குத் தள்ளி 'சரணாகதி மகத்வத்தை' 'சில புராதன சட்டதிட்டங்க'ளுடன் சொல்லி, 'பாட்டு எழுதாத கவி, கதை எழுதாத ஆசிரியர்' மூலமாய் 'எங்கள் அன்னை'யை புகழ்ந்து பாடுவேன். 'கம்பனும் காரிமாறனும்' திகைக்கும்படி 'பாட்டியின் கல்யாணம், பேத்தியின் கல்யாணம்' இரண்டையும், 'நவீனங்களின் முன்னோரை' நம் 'வாழ்க்கை'யில் 'கமலாவின் பக்தி'யால் பிணைத்து, 'மோரோஜி'யைப் போன்ற வீரனையும், 'பன்னே'யைப்போன்ற உறவினரையும் 'நிர்மலா'வைப் போன்ற காதல் கன்னியையும், தரும்படி 'தமிழ்த்தெய்வ'த்தைப் பாடி, 'டில்லிவைபோகத்தை'க்கண்டு 'திரும்பவும் மெதுஸேலாவுக்கு'ப் போய் திரும்பும்பொழுது 'நவீன அனுசூயா'வாய் 'தக்கப் பரிசு'டன் 'நூற்றுக்கு நூறு மார்க்கு'டன் வந்து, நேசிகளால் 'விருந்தனுபவம்' பெற்று திகைத்திருக்கும்போது 'பட்-பட்-பட்' என்று முதுகில் விழ.' இது உண்மையாகவா!' என்று தோன்றவே சட்டென்று அதைவிட்டு 'விடுதலை' பெற்றேன். அச்சமயம் 'வேம்பும்,

அரசும்' சுற்றிக்கொண்டு வருபவர்கள் 'எச்சில்' மிதிக்காமல் மடியுடன் 'இதுவன்றோ ஈசன் செயல்' என்று சொல்லிக்கொண்டு போனது காதில் விழ 'பேசாமடந்தை பிரசங்கமாரியானது'போல் நானும் நினைவில்லாமல் 'ப்ரார்த்தனை'யிலாழ்ந்தேன்.

"அதோ ப்ரார்த்தனையின் பல குரல்கள் கேட்குதடீ தோழீ!"

"உன் ப்ரார்த்தனை பலித்ததா? எப்படி?"

---

ஸ்ரீமதி. ரங்கப்ரியை

## ஆனந்தக்களிப்பு

அருமையாம் மோகினி அளித்துள்ள விருந்து
அலுத்திடா அமுதமாய், அறிந்துண்ணச்செய்யும்
அகமகிழ் மலராய், அழகதுவாய் மலர்ந்து
அரிதான மணத்துடன், அருமையாய் வீசுகின்றனளே !

அறியாதவருடைய, அறியாமை நீக்கி
அழியாப்புகழை, அருமையாய்த் தாங்கி
அழகுமலராய் பூத்து, ஆனந்தமுறச்செய்து
அரிதானத்தாண்டவம், ஆடுகின்றனளே !

அருமையாம் மோகினியில், ஆனந்தமலராயுதித்து
இறுதியில் நம் கரத்தில் ஈந்திடச்செய்து
உலகத்திலிருப்பவரை ஊக்கமுடன் படிக்க
எத்திசையும் பரவி ஏத்தியே தொழுதிட
ஐயமில்லாமல் ஒழிவின் னோத்தை
ஓதியே கல்வியை ஔவம்மை கோதையார் செய்த
ஃதொருத் தொண்டை அனைவரும் கண்டு ஆனந்தமெய்தி
அருந்நவ மோகினிக்கு ஆசி கூறிடுவோமே

---

ஸ்ரீமான். வி. ராஜகோபால்

## 'வாழி எம் அன்னை !'

எங்கள் அன்னையின் கைகளும், கால்களும் சேர்ந்து இரும்புச்சங்கிலியில் கங்கண உறவுகொண்டிருந்தால் நாங்கள் அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்போமா? அவளது ஆக்ஞைக்கு உடன்பட்டு 'பட்-பட்-பட்' டென்று அறுத்தெறிந்து, பூரண விடுதலைக்குப் போர்புரிகுவோம். எங்கள் சமஸ்தானத்தில் பாட்டு எழுதாத கவியும், கதை எழுதாத ஆசிரியரும் உண்டோ! ஒவ்வொரு தமிழன் செய்கையிலும் அவன் வாழ்க்கை சீர்திருத்தமுற்று வாழ்க்கை இன்பமும், சமுகச்சுடரொளியும் விளங்கும்! அன்பின் ஜ்வாலை எங்கும் பரவ பல வீரர்களைப் பௌத்ரபாக்கியமாகப் பெற்றிருக்கிறாள் எம் அன்னை! கம்பனும் காரிமாறனும், இன்னும் பல கவிஞர்களின் கவிதைகளுமே அவளுக்கு அலங்கார முறைகள். கண்ணகியின் வீரகற்பின் நிலைமை எங்களுக்கு நினைவில்லையோ? நாமும் நமது இசையும், ஸ்தல மகிமைகளும், மகாபலிபுரம் போன்ற நகரத்துச் சிற்பக்களும், தீர்க்கதரிசிகளான புராதன இந்தியரின் துடியாசுக்கோள்கைகளும், இன்னும் சிறப்புற்று விளங்கி வாழ்க எம் அன்னை! 'நான் ரஸிப்பது கானம்ருதம்' என்கிறாள் எம் அன்னை! நவநாகரீகப்பெண்களே! கற்பில் சிறந்து நவயுக அனுசூயாக்களாக விளங்கி, பேசாமடந்தை பிரசங்கமாரியானதுபோல பூர்ண உரிமையுடன் சொல்வன்மை பெற்று, ராதா-கிருஷ்ணனுக்கு பாமாலை சூட்டி, படமும் பக்தியுமாகி, மந்த்ரஸ்தாயி வான் முற்றும் ஒலிக்கச்செய்திடுவீர்! அதைவிட நம் அன்னைக்கு அற்புதம் எது? சந்தேக நிவர்த்தி செய்திடுவீர்! நம் அன்னையின் தவப்பாலன் கண்ணன். கண்ணன் வருவான், காட்சி தருவான்! நம் அன்னையை இதுவரையில் பிடித்திருந்த ஏழரைநாழிச் சனி விரைவில் அகலுவான்! உணவுப்பொருள் அபிவிருத்தியுற்று உலகச் சமாதானம் நிலவிடச் செய்குவள்! வாழி எம் அன்னை!

டீ பார்ட்டி டின்னர்பார்ட்டி முதலியன பல இடங்களில் அவனுக்குக் காத்துக் கிடக்கின்றன. நம்ம வீட்டிலும் செய்து வழியனுப்பலாம்... அவ்வளவுதானே !

கீர்:—பேஷ்...வெகு அழகாக இருக்கிறது உங்கள் பேச்சு. அவன் என்ன சோற்றுக்கும் பலகாரத்திற்கும் வீங்கிப்போய் இங்கு வரப்போகிறனு? சதா சர்வதா அவனுடன்கூடவிருந்து பொழுதுபோக்காகப் பேசுவது, தமாஷாகக் காரில் சென்று உலாவி வருவது...ஏன், எத்தனையோ சபைகள் க்ளப்புகள் இல்லையா...அங்கெல்லாம் அவனேடு போய் ஆனந்தமாகப் பொழுதைக் கழிக்கக்கூடாதா என்ன? எப்போது பார்த்தாலும் தே...என்று ஆரம்பித்தாள்.

ஆனல் சடக்கென்று நாக்குக் குளறியது. தைரியம் பின்னடைந்து அவள் வாயை அடைக்கச் செய்தது. அவளையறியாமலேயே சற்று நடுங்கிப்போய் அசைவற்று நின்ருள். புண்ணியமூர்த்தி பதிலே சொல்லாமல் கடகடவென்று பெரிதாகச் சிரித்து கீர்வாணியின் முகத்தை உற்றுப் பார்த்தார்.

அதே சமயந்தான் நாம் முன்னதிகாரத்தில் தெரிவித்தபடி அழகுத் தெய்வமே ஓடிவருவதுபோல் நிருபமா ஓட்டமாக ஓடிவந்து புலம்பியபடியே..."டாக்டர் ! அம்மா உங்களைக் கையோடு அழைத்துவரச் சொல்கிருள். அம்மாவுக்கு உடம்பு அதிகமாகிவிட்டது" என்று கண்ணீர் வழிய யாழிசைப்பதுபோல் கூறினள்.

இதைக் கேட்ட புண்ணியமூர்த்தி அலையக்குலைய பெட்டியைத் தூக்கிக்கொண்டு நிருபமாவின் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு ஓட்டமாக ஓடினர். இந்த காட்சியைக் கண்ட கீர்வாணியின் உள்ளம் வெடித்துவிடும்போலாகிவிட்டது. இந்த காட்சியை, மாடியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த சுகுமாரனின் ஆத்திரம் கரைபுரண்டது. வெட்கம் ! வெட்கம்! தேவடியாள் சிறுக்கியின் கையைப் பிடித்துக்கொண்டு ஓடும் மனிதனுக்கு இனி சூடேது, சுரணை ஏது...அனியாயம்!" என்று அவள் வாய் உரத்து முணுமுணுத்தது.

## 6

புலம்பிப் புலம்பித் தவிக்கும் காந்தாமணியின் மூச்சு, பின்னும் தடமாடித் திணறவாரம்பித்ததைக் கண்ட நிருபமா "அம்மா !" என்று தன்னை யறியாது அலறிப் பின் புண்ணியமூர்த்தியின் கைகளைப்பிடித்துக் கொண்டு "டாக்டர் ! எங்கம்மாவுக்கு ஏன் இப்படி மூச்சு வருகிறது ? எனக்கு பயமாயிருக்கிறதே...எங்கம்மா பிழைப்பாளா ! சொல்லுங்கோ ! டாக்டர் !...ஐயோ ! உங்கள் கண்ணிலேயே ஜலம் வருகிறதே...என்ன செய்வேன் ?" என்று துடிக்கிருள்.

புண்ணியமூர்த்தி நிருபமாவைச் சமாதானம் செய்ய நினைக்கிருரே யன்றி எப்படி ஆறுதல் கூறமுடியும் ? 'இப்பவோ ! பின்னையோ !' என்றிருக்கும் மனுஷியின் நிலைமையை அறிந்தும்,பயப்படாதே என்று சொல்லி எப்படி ஏமாற்றுவது ? நிருபமாவின் சங்கடந்தான் அவருக்குத் தாங்க முடியாது பொங்கியது.

சில விடிைகள் விம்மலும் பொருமலும் தவிர வேறு சப்தமே இல்லை. பிறகு காந்தாமணி சற்று சமாதானமடைந்தவளாய், டாக்டரே சற்றும் எதிர்பார்க்காதவிதமாய் அவர் இருகைகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு "டாக்டர்! இந்தப்பாவியை மன்னித்து இவளுடைய இறுதியான விருப்பத்தைப் பூர்த்திசெய்யவேண்டும்...டாக்டர்...நான் கேவலம் தாசி!

இதய ஒலி

கற்பையே விலைக்குவிற்றுப் பிழைக்கும் பாழும் வகுப்பில் பகவான் பிறப்பித்ததானது நான் செய்த பாவமேயன்றி வேறில்லை. மகா தர்மப்ரபுவாகிய தங்கள் பாததூளியை மிதிக்கவும் யோக்யதையற்ற இந்த அபாக்யவதி தங்களுடைய திவ்ய கரத்தைப்பற்ற சிறிதும் யோக்யதை இல்லை என்பதை எனது உள்ளம் வெகு நன்ருக அறிந்தும், இவ்வுலகத்தில் என்னிதய பூர்வகமான நம்பிக்கையை வைத்து என்னுள்ளத்தில் புதைந்து கிடக்கும் பரம ரகஸியமான விஷயங்களைச் சொல்வதற்குத் தங்களையன்றி வேறு எவரையும் என் மனது நாடவில்லை. ஏன் ? நம்பவும் இல்லை.

பரோபகாரத்திற்கே இரவு பகலாகப் பாடுபடும் தங்களை நான் சத்தியமாக நம்புகிறேன். களங்கமற்ற பரிசுத்த இதயத்துடன் தங்களை கடவுளாக எண்ணி தங்கள் கரத்தைத் தீண்டுகிறேனேயன்றி வேறில்லை.'' என்று கூறமுடியாது ச்வாஸம் திணறத் திணறப் பேசுவதைக் கண்ட புண்யமூர்த்தியின் உள்ளம் பின்னும் உருகியது.

''ப்ராணன் ஊசலாடும் சமயம் இத்தகைய மனோ வேகத்துடனும் உணர்ச்சியுடனும் பேசமாட்டாது பேசுவது மிகவும் தப்பிதமாயிற்றே... பேசவேண்டாம் என்பதற்கோ, அவள் மனதில்தான் புதைந்து கிடக்கும் மர்மம் யாதோ ! அதை வெளியிடாமலேயே ப்ராணன் போய்விடுமாயின் அதனுல் என்ன சங்கடங்கள் நேருமோ !'' என்றெல்லாம் புண்ணிய மூர்த்தியின் மனது குழம்பித் தவித்துத் துடித்தது.

நல்ல உயர்ந்த மருந்துகளை இரண்டு ஊசி குத்தினர். அவள் முகத்தைத் தானே துடைத்துச் சமாதானம் செய்தவாறு, '' காந்தாமணீ ! நான் உனக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. எத்தனையோ பெயர்களுக்கு என் மருந்தினுல் பகவான் குணமாக்கியிருந்தும் உன் விஷயத்தில் எனக்கு மிக்க குறைவையே கொடுத்துவிட்டார். உன் நிலைமையை நீ நன்கறிந்துகொண்டதால் உன்னிடம் நான் இப்படிப் பேசவேண்டியிருக்கிறது. அழாமலும், படபடப்பும் ஆயாஸமும் பாதிக்காமலும் மெல்ல உள்ளத்திலிருப்பதைக் கூறு. என்னுலாகிய உதவியை ஈச்வர ஸாக்ஷியாக நான் செய்கிறேன். நீ என்னை எவ்வளவு நம்பியிருப்பதாகக் கூறுகிருயோ, அவ்வளவு நான் அதை நிறைவேற்றக் கடமைப் பட்டிருக்கிறேன். நிதானமாகப் பேசு'' என்று கண்ணீர் முட்டக் கனிகரத்துடன் கூறி காந்தாமணியின் கையைத் தடவிக்கொடுத்தார்.

காந்தாமணி நிருபமாவை இழுத்துத் தன்னருகில் அழைத்துக் கட்டியணைத்து முத்தமிட்டாள். ''கண்மணீ! உனக்கு நான் ஒரு கதை சொல்லப் போகிறேன். நீ கவனமாகக் கேட்கவேண்டும்'' என்ருள். பின்பு டாக்டரை நோக்கி, ''டாக்டர்! இந்தக் கதையைக் கேட்டுப் பரிகஸிக்காதீர்கள்.''தாசிக் குக்கூடவா காதல், கடமை'' என்று அலக்ஷியமாக நினைக்கக்கூடாது. மற்ற குலத்து ஆண்களை, பெண்களைவிட நான் அந்த தெய்வீகக் காதலின் விலையிலாத மகிமையை... ஆனந்தத்தை அனுபவித்திருக்கிறேன்.

தாசியின் வயிற்றில்தான் பிறந்தேன். தாசி என்ருல் சாமான்யப் பெயரளவில் மட்டுமில்லை. நீதி நெறி, நிர்ணயம், பாப புண்ணியம் என்கிற ஒன்றுமே இல்லாத கேவலமான ஒரு தாசியின் வயிற்றில் பிறந்தேன். ஜாதியாசாரப்படிக்குத்தான் ஆடல்பாடல் கற்று கோயிலில் பொட்டும் கட்டினேன். யார்செய்த புண்ணியமோ, என்தாயையே நான்வெறுத்து அவளுக்கு விரோதியாகவே, ஜாதித் தொழில் என்கிற சாக்கடையில் விழுந்துப் புரள மறுத்தேன். அதன்மூலம் படாதபாடும் பட்டேன். இனத்தாரிடமெல்

லாம் எச்சும் பேச்சும் வேண்டியது கிடைத்தது. சுருங்கச்சொல்லின், என்னை ஓர் ஹரிஜனப்பெண்ணுக்குச் சமமாகவே நினைத்து நடத்தினார்கள்.

கோயில் முறையையும் நான் வெறுத்து நிறுத்தினேன். அதனால் மானியத்தையும் இழந்தேன். எனக்கு வயதும் அழகும் சேர்ந்து வளர்ந்து வருவதைக் காணக்காண என் தாய் சாபமிட்டுத் திட்டுவாள். அக்ரம வழியால் மானங்கெட்டுச் சம்பாதித்தப் பணத்தில் என் தாயாருக்கு இரண்டு வீடுகள் உண்டு. ஒன்றில் நாங்களிருந்தோம். மற்றொன்று வாடகைக்கு விடப்பட்டது.

மகா கண்ணியம் வாய்ந்த குடும்பத்தினர் அவ் வீட்டிற்குக் குடி வந்தார்கள். அந்த புண்ணியவானுக்கு விவாகமாகவில்லை. பூர்வ ஜென்மத்தின் பந்தமோ! எந்த ருணானு சம்மந்தமோ! எங்களிருவருக்கும் தெய்வீகமான ப்ரேமை உதயமாகியது. ஒரு கோயிலில் மணந்துத் தம்முடன் என்னை வெளியூருக்கே அழைத்துப்போய்விட்டார்.

என் தாயாருக்கும் எனக்கும் பெரும்பகைமூண்டு உறவே ஒழிந்தது. அவர் என்னை நடத்தியமாதிரியும் என்னிடம் வைத்திருந்த அன்பும் கூற முடியாது. அவருக்கு உடன்பிறந்தவர்கள் யாருமே இல்லை. வயதான தாயார் ஒருத்தியே இருந்தாள். அந்தம்மாள் மகனை விவாகம்செய்துக் களிக்க பேராவல்கொண்டார்கள், அவர்களுக்கும் எங்கள் விஷயம் தெரியும். அந்தம்மாள் என்னிடமே வந்து "என் மகனுக்கு எப்படியாவது விவாகத்தைச் செய்துவைக்க நீதான் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். நீதான் எங்கள் குலவிளக்கை ஏற்றவேண்டும். இதனால் உன்னை அவன் வெறுக்கமாட்டான்" என்று தாயுள்ளத்துடன் கதறுவார்கள்.

ஒரு உயர்ந்த குலத்தின் வம்சமே என்னால் பாழாகிவிடக்கூடாது என்றும், நான் செய்வதும் அக்ரமம் என்றும் என் மனச்சாக்ஷியே என்னைக் குத்திக்காட்டியது. கிழவியின் பரிதாபகரமான வேண்டுகோள் என்னிதயத்தில் சதா ஒலித்துக்கொண்டே இருந்தது.

பிறகு நானே அவரை வற்புறுத்தி விவாகத்தைச் செய்துவைத்தேன். அவர் அரைகுறை மனத்துடன்தான் மணந்தார். மணமாகிய சில மாதத்திற்குள் நான் கர்ப்பவதியானேன். பாழும் கர்ப்பம் எனது வாழ்க்கையின் ஆனந்த தீபத்தை அணைக்கவே வந்த எமன் என்பதை அப்போது உணராது இருவரும் பேரானந்த மடைந்தோம்.

என் கணவரின் மனைவியும் கர்ப்பவதியானாள். அந்தம்மாளும் என்னிடம் வெகு ப்ரீதியாக நடந்துகொண்டாள் என்றால் நான் வேறு என்னசொல்வது! மாதங்கள் பூர்ணமாகிவிட்டன. என்னை அவரே ப்ரஸவ ஆஸ்பத்திரியில் கொண்டுவிட்டார்; இதற்கிடையில் கிழவி இறந்துபோனாள்.

மறுதினமே பெண் குழந்தை பிறந்தது, அவருடைய மனைவிக்கும் பூர்ணமாதம். அவர்களிருவரும் ஆஸ்பத்திரியிலுள்ள என்னையும் குழந்தையையும் பார்க்கவந்தார்கள். பார்த்துக்குழந்தையை இருவரும் வெகுவாய்க் குலாவிவிட்டுக் காரில்போகும்போது மகத்தான மோட்டார் விபத்துண்டாகி பேராபத்தை விளைவித்து விதி, வாழ்க்கைப் பாதையைச் சிதறவடித்தது.

அந்தம்மாளையும் இதே ஆஸ்பத்திரியில் கொண்டுபோட்டார்களாம். அவரை வேறு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றார்களாம், அந்தம்மாளுக்கு இந்த விபத்தினால் உண்டாகிய மகத்தான காயத்தில் ஏதோ தப்பித்தவறி குழந்தையைமட்டும் சாகாமல் வெளிப்படுத்தினார்கள்.

என்னே விபரீதம்! இந்த பயங்கரவிஷயத்தையறிந்த நான் பிரஸவித்தவள் என்பதையும் மறந்து, நர்ஸ்களின் தடங்கல்களையும் விலக்கியடித்துக் கொண்டு ஓட்டமாகச்சென்று, பல டாக்டர்களின் காலில் விழுந்து கெஞ்சிக்

கூத்தாடி அந்தம்மாளிடம் கதறினேன். என்னே பயங்கரம்! என்னே விபரீதம்! அந்தம்மாளின் ஆவி போய்க்கொண்டே இருந்தது.

அவர்கள் என் பெயரைச் சொல்லி "கூப்பிடுங்களேன்" என்று தீனக்குரலில் கெஞ்சிக்கொண்டிருந்தார்கள். அதே சமயம் நான் ஓடினதால் என்னைக் கண்டதும் பெரும் நிதியைக் கண்டது போல் த்ருப்தியடைந்து என்னைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, "காந்தா! காந்தா!...குடி மூழ்கிவிட்டது. இத்தகைய விபரீதம் வரும் என்று நான் சொப்பனங்கூடக் காணவில்லை. காந்தா...காந்தா...நீ ரெட்டைக் குழந்தைகள் பெற்றதாக எண்ணிக்கொண்டு இந்த அபாக்யப் பிண்டத்தைக் காப்பாற்று...கைவிடாதே...கைவிடாதே...சத்தியம் செய்துகொடு. என் கண்மணீ! காந்தா...நீதான் தற்போது பரதேசியாகிவிட்டாய்...அவரும் பிழைக்கமாட்டாராம்...காந்தா...ஒரே ஒரு வார்த்தை. இந்தக் குழந்தையை வளர்த்து எங்கள் ஆசாரப்படி விவாகத்தைச் செய்துவை...தாசியாக்கி விடாதே...தாசியாக்கிவிடாதே"...என்று கூறி முடிக்கும் முன் உயிர் பறந்துவிட்டது.

கதறினேன். முட்டிக்கொண்டேன். இந்த புனிதவதியின் உயிர் போனதை என்னுயிர் போகக்கூடாதா?...என்று துடித்தேன். அருகில் தொட்டிலில் கிடந்த தங்கப் பதுமை போன்ற குழந்தையை எடுத்து மார் புறத் தழுவிக்கொண்டதுதான் எனக்குத் தெரியும். ப்ரக்ஞை இழந்தேன்.

பிறகு நான் கண் திறந்து பார்க்கும்போது இடையில் இரண்டு நாட்கள் ஆய்விட்டதாகவும் எனக்கு இந்த அதிர்ச்சியினால் ஜன்னி கண்டுவிட்டதாகவும், பலமான சிகிச்சை செய்ததில் இப்போதுதான் குறைந்தது என்றார்கள். இதே விபத்தில் தம்பதிகள் சதி முன்னும் பதி பின்னுமாக உலகை விட்டு மறைந்த கோரமான துக்கச் செய்தியை அறிந்து நெருப்பிடைப் புழுவெனத் துடித்தேன்.

'அந்த குழந்தை எங்கே!' என்றேன். அதற்கு யாரும்வார்ஸே வராததால் அதைக் குழந்தைகள் இருக்கும் இடத்தில் கிடத்தியிருப்பதாகத் தெரிந்தது. அதைக் கேட்டுத் துள்ளினேன். நானே அதன் வார்ஸ்...நாங்களிருவரும் ஒரே பர்த்தாவின் மனைவிகள் என்பதைப் பல உதாரணங்களுடன் நான் விளக்கி குழந்தையை என்னிடம் வரவழைத்தேன்.

இதற்குள், குழந்தையையும் அவருடைய சொல்ப பணத்தையும் என்னிடமே கொடுக்கும்படியாயும் குழந்தையை நல்ல முறையில் ஆடல் பாடலுடன் கலைத்திறமையாக வளர்த்துக் கல்யாணம் செய்து வைக்கும்படியும் அவர் ஆஸ்பத்திரி டாக்டரிடம் கூறியதாயும் செய்தி எட்டியது.

பிறகு ஆக்ஷேபனையின்றிக் குழந்தையைக் கொடுத்தார்கள். இன்னும் வளர்த்துவானேன்? அந்த நிமிடத்தோடு என் வாழ்க்கையில் பெரிய எரிமலையே வந்து வீழ்ந்து அழுத்தியது. பிறகு இரு குழந்தைகளுடனும் வீட்டிற்குப்போனேன். அந்தகாரம் குடிகொண்டு சூனிய உலகத்தில் சஞ்சரிக்கும் என் நிலைமையை இப்போது நினைத்தாலும் இதயம் துடிக்கிறது.

பிறகு அவருடையவும் அவர் தர்ம பத்தினியுடையவுமான க்ரியைகளைச் சிறப்பாக செய்வித்தேன். சிங்காரப்பூங்காவனமாக விருந்த இடம் இருண்ட பயங்கரக்காடுபோலாகிய பிறகு அங்கிருக்க மனது பதறியது. அவருடைய சொத்துக்களையும் மற்ற சாமான்களையும் எடுத்துக்கொண்டு இரட்டைக்குழந்தைகளுடன் பேயானாலும் தாய் என்கிற பழமொழிப் படிக்குத் தாயிடமே வந்தேன்.

எனக்கு இரட்டைக்குழந்தைகள் பிறந்ததாகவே முதலிலிருந்து நான் ப்ரசாரம்செய்து ஸ்தாபித்துவிட்டேன். என் தாய் 'பேயானாலும் தாய்' என்பதை மாற்றி பேயாகவே என்னைப்பிடித்து ஆட்டி என்னிதயப் புண்ணைக்கிளறிச் சித்திரவதைசெய்து தன் தொழிலில் இனியாவது ஈடுபடு என்று உபத்திரவித்தாள்.

மகா உத்தமனாகிய என் தம்பி மட்டும் "ஏன் அவளைத்தொந்தரவு செய்யவேண்டும்! அவளிஷ்டப்படி இருக்கட்டும்'' என்று என் தாயாரையே கடிந்தான், என் தாயும் இளையசகோதரியும் தாசிகளாகவே இருக்கும் ஆபாஸ இடத்தில் இக்குழந்தையை வளர்ப்பது மகாபிசகு என்று என் மனத்தில் தோன்றியதால் உடனே நான் என் தம்பியின் உதவியினால் இவ்வூருக்கு வந்தேன். எனக்கும் குழந்தைகளுக்கும் கால்வயிறு கஞ்சிக்குப்போதுமான சங்கீதத்தைக் கடவுள் எனக்குக் கொடுத்திருந்த தால் பாட்டு சொல்லிக்கொடுத்துப் பிழைப்பது என்கிற உறுதிடைந்தேன்.



இரண்டு குழந்தைகளையும் இரண்டு கண்ணேபோல் என் பாலைக் கொடுத்து வளர்த்தேன். என் குழந்தைக்கு 'சத்யபாமா' என்றும் என் கணவரின் குழந்தைக்கு 'நிருபமா' என்றும் பெயரிட்டு வெகு செல்ல மாகவே வளர்த்தேன். ஒரு வயது ஆவதற்குள்ளேயே கடவுள் நிருபமாவை மட்டும் தனியளாக்கி மற்றொன்றைத் தன்னிழலில் சேர்த்துக்கொண்டார். அப்பேர்ப்பட்ட நிதிகளையே பறிகொடுத்தவளுக்கு இதுவும் ஒரு சோத னையே என்று விசனித்தேன். பிறகு தேறினேன்.

வருடங்கள் அதி வேகமாக உருண்டுகொண்டே போகின்றன. இன்று தான் சம்பவம் நடந்தது போன்றிருக்கிறது. இதற்குள் எத்தனை மாறு

இதய ஒலி

தல்கள்! எத்தனை விசித்திரங்கள்!...டாக்டர்!... என் கண்மணி நிருபமாவை என் மகளென்றே இன்னிமிடம்வரையில் உலகம் நினைத்திருக்கிறது. அவள் தாசியின் உதிரத்தில் பிறந்தவளல்ல. அவள் உயர் குலத்து உத்தம உதிரத்தில் ஜெனித்த மாணிக்கம். அவளுடைய பெற்றோரின் இறுதி வாக்கை நான் கடைப்பிடிக்கவே அவளை வெகு மேன்மையான முறையில் வளர்த்துவருவதோடு என்னுடைய உறவினர்கள் அத்தனை பெயர்களையும் நான் துறந்தேன். என் கண்மணிக்காக என் வாழ்நாளையே த்யாகம் செய்யவும் தயாராகவே இருந்தேன். என் நிருபமாவின் பொருட்டு நான் நூறு வயது வாழ்வதையும் விரும்பினேன். ஆனால் காலக் கூற்றுவனின் விருப்பம் வேறாகிவிட்டது. தலைவிதியின் தாண்டவம் விபரீதமாகிவிட்டது.

டாக்டர்! என் சிறிய தாயாரை நான் என்னதான் நம்பினாலும் அவளும் அவளைச் சார்ந்தவர்களும் தாசி உள்ளம் படைத்த பாவிகள்தான். என் கண்மணியின் பெற்றோர் மரணத்தறுவாயில், "என் குழந்தையை தாசியாக்காதே" என்று கூறியது இன்னும் என்னிதயத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. ஆகையால் அவளிடமும் என் ரத்தினத்தை ஒப்பிக்க என் மனது துணியவில்லை. டாக்டர்!...டாக்டர்...ஏன் இப்படி அழுகிறீர்கள்?...நிருபமா...என் கண்மணி! நாம் இதுகாறும் தாசியால் வளர்க்கப்பட்டோமே என்று நீ வருந்துகிறாயா!" என்று நடுவில் ஒரு கேள்வியைப் போட்டு சற்று ஆயாஸத்தால் மௌனமானாள்.

நிருபமாவுக்கும் டாக்டருக்கும் உண்டாகிய ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. எனினும் நிருபமாவின் துக்கம் கரைகடந்து காட்டு வெள்ளம்போல் பொங்கிவருகிறது. காந்தாவைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு கோவெனக் கதறுகிறாள். "அம்மா!...அம்மா!"...என்று அலற்றுகிறாளேயன்றி மறுபேச்சு வாயிலிருந்து வரவில்லை.

மறுபடியும் காந்தாமணி சற்று சமாளித்துக்கொண்டு நிருபமாவுக்குப் பல முத்தங்களிட்டுப் பின், "டாக்டர்! என் வேண்டுகோள் எது என்பது இப்போது தாங்களறிந்திருப்பீர்கள். என் கண்மணியை அடைக்கலமென்று தங்களிடமே ஒப்படைத்துவிட்டேன். "நான் அவளை ஏற்றுக் கொண்டேன். நீ கவலைப்படாதே" என்று கூறினால்தான் என் ஆத்மா சாந்தியடையும்...டாக்டர்! ஏற்கெனவே தாங்கள் என் வீட்டிற்கு வருவதைப்பற்றி உலகம் அனியாயமாய்த் தூற்றுவதையும் அபாண்டப் பழியுடன் பேசுவதையும் நான் அறியாமலில்லை. எதற்கும் மனக்காவலா மதில் காவலா...அந்த சர்வேசன் பாதசாக்ஷியாக நம் பரிசுத்தம் இருந்தால் போதும்...தேவடியாள் பெண்ணை ஆதரிக்கின்றான் என்கிற வசை தங்களுக்குச் சாராதிருக்கும்பொருட்டே நான் தகுந்த ஏற்பாடுகள் செய்துவைத்திருக்கிறேன். வருடங்கள் பதினாலு ஆனபோதிலும் சம்பவத்தை யாரும் மறக்கமுடியாது பாருங்கள். நாங்கள் முன்பிருந்த ஊர் ஆஸ்பத்திரியில் இந்த கோர சம்பவத்தைக் கண்டவர்களின் சாக்ஷியமும், இக் குழந்தை ஸ்ரீமான் குமரேசனுக்கும் குமுதவல்லிக்கும் பிறந்தது என்ற ஆஸ்பத்திரிப் பதிவையும், விபத்து நடந்ததைக் குறித்துள்ள போலீஸாரின் சாக்ஷியமும், டாக்டர்களின் சாக்ஷியமும் அப்போதே நான் வாங்கி வைத்திருக்கிறேன். ஏனெனில் இவளை என் மகளென்றே வளர்த்துவிட்டாலும் கல்யாணம் செய்யும்போது அவனுக்குச் சொல்வதற்காக இவைகள் அவச்யம் என்று எனக்கு முன்யோசனையாகத் தோன்றியதால் கைப்பட வாங்கிவைத்திருக்கிறேன்...நிருபமா...என் கைப்பெட்டியை எடுத்துவா"...என்றாள்...டாக்டர்! அபலையை ஆதரிப்பீர்களா...இத்தனை

தகவல் இருக்கையில் உங்களுக்கு எவ்விதமான கெடுதியும் வராதல்லவா?" என்று அழுத்தமாகக் கேட்டாள்.

புண்ணியமூர்த்திக்கு உண்மையில், ஒரு ரஸமான கதையைப்போல் தோன்றி பெரும் வியப்பைக்கொடுத்தது. உண்மையாக வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்கள்தான் கதையைவிட அதிகமான ப்ரமிப்புடனிருக்கின்றனவென்று எண்ணி ஆச்சரியமும் காந்தாமணியின் வாழ்க்கையின் துக்ககரமும் ஒன்றுகூடிய குழப்பத்துடனிருந்தார்.

அச்சமயம் நிருபமா ஒரு சிறிய கைப்பெட்டியைக் கொண்டுவைத்தாள். காந்தாமணி, தன் கழுத்திலேயே வைத்திருந்த சாவியை எடுத்து டாக்டரிடமே கொடுத்து... "அபாடா! என் கவலை தீர்ந்தது. இதோ, இதில் சகலவிவரங்களும் இருக்கின்றன. என்கணவரும் நானும் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள், அவரும் அவர் மனைவியும் எடுத்துக்கொண்ட படங்கள் எல்லாம் இதிலிருக்கின்றன. அவருடைய சொத்துக்கள் அதிகமில்லை யெனினும் இருந்த பத்தாயிரம் ரூபாயை நான் பாங்கியில்கூடப் போடவில்லை. ஏனெனில் அதுகூட என்னினத்தாருக்குத் தெரிந்தால் அடித்துப்பிடுங்கிவிடுவார்கள். வஞ்சம் படைத்த அவர்கள் கண்ணில் படாமல் பத்திரமாக இருப்பதற்காக வட்டி வராவிடினும் பாதகமில்லை அசலை அப்படியே அவளுடைய விவாகத்தின்போது அவள் கணவனிடம் கொடுத்துவிடவே எண்ணி, எல்லாவற்றையும் நோட்டுக்களாக மாற்றி இதோ இப்பெட்டியின் கள்ள அறையில் வைத்திருக்கிறேன். மற்ற கடிதங்கள். அவருடைய பரம்பரையைச்சார்ந்த சில குறிப்புகள் யாவும் இதோ இருக்கின்றன. உங்கள் அருமைக்கரத்தினாலேயே திறந்துபாருங்கள். எங்கள் வக்கீலை வரச்சொல்லி இருக்கிறேன். என் மரணத்தறுவாயில் நான்கு பெரியமனிதர்களை வைத்துக்கொண்டு ஒரு பத்திரம் எழுதிவிடலாம் என்று தோன்றுகிறது. நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? அதேவிஷயங்களைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்திச் சகலருக்கும் தெரிவித்துவிட்டால் தங்களை அத்தனை உபத்திரவம் பாதிக்காது." என்றாள்.

இதற்குள் பெட்டியைத் திறந்து புண்ணியமூர்த்தி அதிலுள்ள சகல கடிதங்களையும் பார்த்தார். புகைப்படங்களை உற்றுக் கூர்ந்து கவனித்தார். நிருபமாவின் சாயல் அப்படியே ப்ரதிபிம்பிப்பதுபோல் அவள் தாயார் உட்கார்ந்திருந்ததானது,தானே நேரில்சாக்ஷி சொல்வதுபோல்தோன்றியது.

படத்தையும் நிருபமாவையும் மாறிமாறிப் பார்த்தார். நிருபமாவுக்கு இதுகாறும் இப் படத்தை காந்தாமணி காட்டவே இல்லை. இப்போது அதை வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டு மார்போடணைத்துச் சில நிமிடங்கள் சவம்போலக் கிடந்தாள். கண்ணீரும் விம்மலும் போட்டி போட்டன.

பிறகு சற்று சமாளித்துக்கொண்டு நிருபமாவை இழுத்துக் கட்டி முத்தமிட்டுப் பின், "கண்மணீ! இதோ உன் தாயார் தகப்பனுரை நன்ருகப் பாரம்மா! தேவகி பெற்ற கண்ணனை எசோதைபிராட்டியே அனுபவித்து ஆனந்தக்கடலாடியதுபோல் உன்னை நான் அடைந்து இதுகாறும் இன்புற்றுக் களிக்கவும் கொடுத்துவைத்தேன். இதோ இந்தக் கள்ளறையில் பத்தாயிரம் ரூபாயும் உன் தாயார் திருமேனியை அலங்கரித்துவந்த நகைகளும் இருக்கின்றன. அவைகளை நீ அணிந்துகொண்டு காக்ஷிகொடு பார்க்கலாம்" என்ருள்.

நிருபமாவுக்குத் தனது தாய் தந்தையர்களைப் படத்தில் பார்த்ததும் ஏதோ ஒரு மாதிரியான உணர்ச்சி தோன்றியது; எனினும் காந்தாமணியே

அன்னை என்கிற ஒரு அழுத்தமான உதரத்தில் ஊறிப்போன உணர்ச்சியை மட்டும் அவளால் மாற்றவோ மறக்கவோ முடியவில்லை...தன் தாயார் இறந்துவிடப்போகிறளே என்கிற துக்கமே அவளை வாட்டுகிறது. காந்தா மணியின்மீது படுத்துத் தேம்பித் தேம்பிப் புலம்புகிறள்.

புண்ணியமூர்த்தி நிருபமாவைச் சமாதானப் படுத்திப்பின் அவளை அணைத்துக்கொண்டு "குழந்தாய்! அழாதேம்மா! நீ கொடுத்துவைத்தது அவ்வளவுதான். அம்மாவின் அந்தியகாலம் நெருங்கும்போது அவள் ஆத்மா சாந்தியடையும்படி பகவன்னமத்தை உச்சரித்து நல்ல கீர்த்தனங்களைப் பாடு...அழாதேம்மா!...

காந்தாமணீ! உன் சரிதையைக் கேட்க என் மனம் கரைந்துருகியது. எந்த ஜாதியில் உதித்தால் என்ன? இதயத்தின் பரிசுத்தமும் ஒழுக்கமுந்தான் ப்ரதானமேயன்றி ஜாதியாலும் குலத்தாலுமா இருக்கிறது? உன் வயிற்றிலேயே பிறந்த பெண்ணயிருந்தாலும் என்னல் முடிந்தவரையில் அவளைக் காப்பாற்றியே தீருவேன். நீ கவலைப்படாதே, காந்தாமணீ! நிருபமாவை இதுகாறும் நீ உன் மகளாகவே பாவித்து வளர்த்ததுபோல் இனி நான் என்னுயுள் உள்ளவரையில் அவளை என் குழந்தையாகவே வளர்த்துச் சரியான வரனைத் தேடி மணத்தை முடித்துவைத்து அவள் பெற்றோர்கள் மரணத்தறுவாயில் சொல்லிய வார்த்தைகளைக் காப்பாற்றுகிறேன். உன் பொறுப்பு பூராவும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

இன்னுமொரு விஷயம். நீயாக உயர்ந்த குலத்துப் பிள்ளை யாரையாவது உன் மனத்தில் நினைத்திருந்தால் அதையும் என்னிடம் சொல்லிவிடு; அப்படியே நான் விவாகத்தையும் முடித்துவிடுகிறேன்." என்று வினயமாகக் கேட்டார்.

காந்:—டாக்டர்! அம்மாதிரி தீர்மானமாக ஒன்றுமில்லை. ஆனல் இந்த வீட்டின் எதிர்வீட்டில் ஒரு வக்கில் குடியிருந்தார். அவருடைய மகனும் நிருபமாவும் வெகு அன்யோன்யமாக விளையாடிப் பழகுவார்கள். பள்ளிக்கூடமும் ஒன்றுகவே போவார்கள். அந்தம்மாளும் வக்கீலும் "இந்த பெண் உன் பெண்ணுக இல்லாதிருந்தால் நான் கட்டாயம் என் மகனுக்கு இப்போதே விவாகத்தைச் செய்துவிடுவேன்" என்று கூறுவார்கள்.

டாக்டர்! என் மனது அப்போதடைந்த வேதனையைக் கூறமுடியாது. என்னுடைய மர்மத்தைச் சொல்லிவிடலாமா என்று நாக்குத் துடிக்கும். ஆனல் எதனலோ சொல்லவும் நாத்தடுமாறியது. காலம் வரும்போது சொல்லலாம் என்றிருந்தேன். அந்த வக்கீலுக்கு முனிசிப் வேலையாகிவிட்டதால் அவரை வெளியூருக்கு மாற்றிவிட்டார்கள்.

அவர்கள் சென்று 5,6 வருஷங்களுக்குமேலாய்விட்டன. நல்ல உயர்ந்த குலத்திலும் பிறந்து உயர்ந்த பதவியிலும் இருக்கும் அவர்களுக்கு இந்த நாய் ஜன்மம்படைத்த தேவதாசியின் நினைவு ஏன் வரப்போகிறது? அதன்பிறகு அவர்களைப்பற்றி ஒன்றுமே தெரியாது. அதைப்பற்றி இனி நினைத்துப் பயனென்ன? உங்கள் இஷ்டம்போல் இப் பரதேசிக் குழந்தையைக் காப்பாற்றுங்கள். அதுதான் எனக்குப் போதும்..."

என்று பேசமுடியாது பேசினள். டாக்டர் மீண்டும் ஒரு ஊசி குத்தி உயர்ந்த மருந்தைக் கொடுத்ததோடு, வெகு நேரமாகப் பேசிவிட்டதால் மிகவும் களைப்பு உண்டாகிவிட்டது. இனி சற்று நேரம் பேசாது ஓய்வு எடுத்துக்கொள்ளும்படிக்குக் கூறினர். அவருடைய மனே குழப்பத்தில் அவர் தான் வீட்டிற்குப் போகவேண்டும் என்பதையே மறந்தார். இந்தப் பரிதாபமே அவர் இதயத்தில் பதிந்தது.

# 7

காந்தாமணிக்கு இத்தனை வருஷமாக இதயத்தை மலைபோல் அழுத்தி வதைத்துவந்த பாரம் குறைந்ததுபோன்று, இதுகாறும் கண்டறியாத ஒரு ஆனந்தம்... புதிய இன்ப அலைமோதல்... உணரமுடியாத உணர்ச்சி எல்லாம் ஒருங்கேகூடி அவளுடைய மரணவஸ்தையிலும் ஆனந்தமே தலைதூக்கி நின்றது.

டாக்டரை பலமுறை கரங்குவித்து வணங்கினாள். ஆனந்தக் கண்ணீர் விடுகிறாள். "டாக்டர்! வீட்டிற்குப் போகாமல் இங்கேயே இருக்க மாட்டீர்களா!" என்று கெஞ்சுகிறாள்... ஏதேதோ வார்த்தைகள் அவள் உணர்ச்சியின் மிகுதியால் பொங்கிப் பொங்கி வருகின்றன.

இவளுடைய வக்கீலும் இன்னொரு பெரியவரும் வந்தார்கள். வில்லெழுதவேண்டிய வேலையும் விளம்பரம் தயாரிக்கும் காரியமும் முடிந்தது, 'காந்தாமணியின் பெண்ணல்ல நிருபமா' என்பதைக் கேட்டு அவர்கள் ப்ரமித்தார்கள்.

அதிகம் வளர்த்துவானேன். அன்று புண்ணியமூர்த்தி பெரும் பாகமும் அவ்விடத்திலேயே இருந்தார். அன்று செல்ல மறுநாள் காந்தாமணியின் ஆவி பறந்தது. தான் தாசிமகளல்ல என்பதையறிந்தும் நிருபமா கட்டுக்கு அடங்காது அழுது புரண்டு துடித்தாள். புண்ணியமூர்த்தியின் காலை விடாது கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கதறினாள். "என்னைக் கைவிடாதீர்கள்; என்னைக் காப்பாற்றுங்கள்" என்று அந்தப் பச்சிளங் குமரி கதறுவதைச் சகியாத புண்ணியமூர்த்தியும் கண்ணீர் வடித்தவாறு அவளுக்கு ஆறுதலை யளித்துத் தேற்றினாள்.

அன்று சவச்சடங்கு ஆவதற்குள்ளேயே காந்தாமணியின் ரகஸியமும் நிருபமாவின் சரிதையும் குசமசவென்று சிறுகச் சிறுகப் பரவிவிட்டது. இனி கேட்கவேண்டுமா! தாசிகளில் சிலர் வேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டு இந்த விஷயமெல்லாம் வெறுங் கட்டுக்கதை என்றும், காந்தாமணியின் மகள்தான் நிருபமா என்றும் வீண்வாதம் செய்து ரகளை பண்ணி, நிருபமாவின் கையினால்தான் கொள்ளிபோட்டுக் கருமாதிகள் செய்யவேண்டும் என்று ஆகாத்யம் செய்கிறார்கள்.

ஒப்புயர்வற்றதும், விலை மதிப்பற்றதுமான கற்பையே விலைக்கு விற்கும் பரத்தையர்களின் மானங் கெட்ட கூச்சலும் சண்டையும், பிடிவாதமும் ஒரே தடபுடல் ரகளையாக விருப்பதைக் கண்ட புண்ணியமூர்த்திக்கும் இன்னும் அவரைப்போன்ற பெரிய மனிதர்களுக்கும் வெறுப்பும் ஆத்திரமும் மூண்டன.

பாவம்! நிருபமாவின் நிலைமையை விவரிக்கவே முடியாது தத்தளிக்கின்றாள். "காந்தாமணியின் பாலைக் குடித்து அவளது அளப்பரிய அன்பின் சக்தியாலேயே வளர்ந்த நாம் ஏன் அந்த உத்தமிக்குக் கொள்ளி போடக்கூடாது? நேற்று இந்த பரம ரகஸியம் வெளியாகும்வரையில் அந்தப் புனிதவதியைத்தானே நான் என்னைப்பெற்ற அன்னை என்று எண்ணியிருந்தபோது, அவளுக்கு கைங்கரியம் செய்வதில் என்ன தவறு?" என்ற எண்ணமே நிருபமாவின் இதயத்தில் உத்வேகத்துடன் பொங்கி எழுந்தது. உடனே அவள் புண்ணியமூர்த்தியிடம் ஓடினாள். "மாமா! வீணாகச் சண்டையும் பூசலும்வேண்டாம். என்னிதயபூர்வமாக நான் அந்த பரிசுத்த வதியையே தாயாக எண்ணி என் அன்புமுற்றும் அவர்களிடமே அர்ப்பணம் செய்திருந்தேனல்லவா... அதோடு அவள் என் தகப்பனாரின் மனைவியல்லவா! தான் கொடுத்தவாக்குப்படி என்னை இதுவரையில் பரிசுத்தமாக வளர்த்த தாயாருக்கு நான் ஏன் க்ரியைகள் செய்யக்கூடாது?

இதய ஒலி

சாக்ஷாத் ஸ்ரீராமபிரான் ஒரு பக்ஷியாகிய ஜடாயுவுக்கு ஈமக்ரியைகளைத் தமது ஒப்புயர்வற்ற கரத்தினாலேயே செய்யவில்லையா! பூர்வாசார்யர்களில் ஒருவராகிய ஸ்ரீ பெரியநம்பி தமது அளப்பரிய பக்தியின் மிகுதியால் தாழ்ந்த வகுப்பினரான மாறன்நேர் நம்பிக்கு ஈமக்ரியைகள் செய்து இன்புறவில்லையா! கேவலம் அனித்யப்பிண்டமாகிய நான் என் அன்னைக்கு மேலான அன்னையாக பாவித்த உத்தமிக்குச் செய்வதில் என்ன தடை? சாஸ்திரமோ! சம்பிரதாயமோ! எது எப்படியாயினும் ஆகட்டும் நான் செய்தே தீருவேன்.'' என்று உணர்ச்சிப்பெருக்குடன் ஆவேசமாகக் கூறிப்பின் எல்லோரும் வியக்கும் வண்ணம் காந்தாமணிக்கு மஞ்சள்பூசி நீராட்டிப்பின்னர் சவஅலங்காரத்தைத் தன் கரங்களாலேயே பரமதருப்தியுடன் கண்ணீர்பெருகச் செய்துமுடித்தாள்.

இந்த சிறுமியின் மனோவலிமையும் இவளது துணிகரமும் ஆழ்ந்த அன்பும் எல்லோரையும் ப்ரமிக்கச்செய்தன. கேவலமான மனப்பிரமை கொண்ட சில தாசிகளும் வியப்புக்கடலாடி மூக்கின்மேல் விரலைவைத்தார்கள். நெருப்பில்பட்ட புழுகெனத்துடித்தவாறே ஸ்நானம்செய்துப்பின் வீடுவந்தாள். வீட்டில் என்ன இருக்கிறது? தன்னை உயிருக்குயிராக வளர்த்த ஜோதிச் சுடர்மறைந்துபோய் அந்தகாரமும் பயங்கரமும் குடிகொண்டன. சவச்சடங்கு ஆவதற்குள்ளேயே வீட்டில்வந்துள்ள சில அல்ப தாசிகள் அகப்பட்டதைச்சுருட்டிக்கொண்டு போய்விடும்நோக்கத்துடனிருப்பதையறிந்த டாக்டர், தமது இளையகுமாரனை வீட்டில் காவல்வைத்துவிட்டுத் தான் மற்றதைக் கவனித்தார்.

டாக்டர் தலையிட்டு இவ்வளவு ஆதரவுடனும் பரிவுடனும் செய்வதைக் கண்டு தாசிகளில் சிலர் வயிறெரிந்தார்கள். ஒன்றையும் தொடமுடியாதிருக்கும்போதும் கையில் கிடைத்த துணிமணி, செம்புதவலை இவைகளைப் புறக்கடைவழியாக வெளியேற்றினர்கள்.

நிருபமாவுக்கு அவ்வீட்டிலிருக்கப் பிடிக்காமல் மனது குழம்பித் தவித்தது. தாசிகளில் சிலர் இங்கேயே முகாம்போட்டுத் தம் தம் விமர்சனங்களைப் பேசவாரம்பித்தார்கள். ஏற்கெனவே இந்த தாசிகளுடன் பழகியறியாத நிருபமாவுக்கு இப்போது அவர்களைப்பார்க்கவே பிடிக்கவில்லை. வெள்ளைரவிக்கையும் வாய்நிறையப்புகையிலையின் காவி ஏறிய கோரமும் அவர்கள் பேசும் அனாவசியமான பேச்சும் யாருக்குத்தான் பிடிக்கும்?

புண்ணியமூர்த்தி வீட்டில் சில நோயாளிகளின் ஆபத்தான நிலையைக் கூறி அவரையழைத்துப்போக ஆள்மேல் ஆள் இங்கேயே வந்துவிட்டது. புண்ணியமூர்த்திக்கு நிருபமாவை இங்கு விட்டுப்போகவே மனதுவரவில்லை.

ஊழல் குப்பைகள்போன்ற இந்த தாசிகளின் அட்டகாஸமும் பேச்சும் அவருக்கு மிகவும் அருவருப்பைக்கொடுத்தன. காந்தாமணியின் சிறிய தாயாராகிய கிழவி புண்ணியமூர்த்தியிடம் வந்து "ஸ்வாமி! நானும் ஒரு தாசிதான் எனினும் என் கண்மணி காந்தாமணியைப்போன்ற சீலம் ஒழுக்கம், உத்தம லக்ஷணம் முதலியவைகளில் அவள் கால் தூசிக்கும் நானாகட்டும், இங்குள்ள மற்றவர்களாகட்டும் ஈடாகமாட்டார்கள். இந்த நாற்றக்குப்பையில் பழகித் தவிக்கவிடாமல் குழந்தையை நீங்கள் அழைத்துக்கொண்டு போய்விடுங்கள். வீண் சண்டைக்கும் சச்சரவுக்கும் இடமே வேண்டாம்.'' என்று தானாகவே வந்து கூறினாள்.

புண்யமூர்த்திக்கு அதுவே உசிதமாகத் தோன்றி அழுதுத் துடிக்கும் நிருபமாவிடம் சென்று "குழந்தாய்! அழாதேம்மா! உன் தாயாரின் க்ரியைகளைச் செய்ய நீயே மகத்தான சத் விஷயங்களை உதாரணம்

சொல்லிவிட்டு இப்படி மனந்தளரலாமா! பகவான்தான் அழியாத பெருந் துணை. அவன்தான் நித்யமான சாச்வத காப்பாளி. அவர் திருவடிகளை நம்பி நீ மனந்தேறவேண்டாமா? அழாதே. எழுந்து முக்கியமான சாமான்களையெல்லாம் எடுத்துக்கொண்டு என்னுடன் வா...பஞ்சாயத்தாரின் மத்தியஸ்தத்துடன் சொத்துக்களைக் கணக்கு எடுத்திருப்பதால் இனி பயமே இல்லை. எனக்கு அசாத்ய வேலை இருக்கிறது. வாம்மா!''... என்று வெகு அன்போடு கூறி அவளை அழைத்துக்கொண்டு கிளம்பினர். தாசிகளின் பொருமைத் தீ எப்படித்தான் கொழுந்துவிட்டு எரிந்தது என் பதை அளவிட்டுக் கூறச் சாத்யமேது?

## 8

கீர்வாணிதேவியின் திருவுள்ளக் குழப்பத்தையும், தீராத ஆத்திரத்தையும் வர்ணிக்க முடியுமா! தன் தம்பி வரப்போகிறன் என்பதை அறிந்தும் அவர் அதற்காக ஒரு சந்தோஷ வார்த்தையும் சொல்லாமல் போனதானது எரிகிற அடுப்பில் எண்ணெயை ஊற்றியதுபோலாகியது.

அதிலும் "போதாக்குறைக்குப் பொன்னியம்மன் குறை" என்பது போல் கிருபமா ஓடிவந்து அழைத்ததும், இவர் அவசரமாகக் கூடவே ஓடியதும் பின்னும் அவள் பொருமைத் தீயைத் தூண்டிவிட்டு எரியச் செய்தன. மாடியிலிருந்து இதே காட்சியைப் பார்த்துக்கொண்டு கண்களில் தீப்பொறி பறக்க நின்றுகொண்டிருந்த சுகுமாரன், சிவபெருமான் நெற்றிக்கண்ணைத் திறந்துவிட்டதுபோன்ற கோபத்துடன் கீழே தடதடவென்று வந்து "அம்மா! நாடகத்தின் அழகைப் பார்த்தாயா! இப்போதுதான் அந்த தேவடியாள் வீட்டு வாசலில் நம்ப கார் நின்றிருந்ததை என் கண்ணால் பார்த்தேன். இதற்குள் அந்த கூத்தாடிச் சிறுக்கி வந்தழைப்பதும் இவர் ஓடுவதும் என்ன கண்றாவியம்மா இது! மாமாவும் லலிதகுமாரியும் வந்திருக்கையில்கூட இவர் ஒரேயடியாய் தேவடியாள் வீடே கதியாகவிருந்தால் எத்தனை அவமானம்?எனக்குப் பிடிக்கவே இல்லை.'' என்று பல்லைக் கடித்தான்.

அச் சமயம் அங்கு வந்த ட்ரைவரைப் பார்த்து கீர்வாணி ஒருவிதமான கடுகடுப்பும் சிடுசிடுப்பும் கொண்டு..."ட்ரைவர்! என் தம்பியும் அவன் மகளும் ஊரிலிருந்து வரப்போகிறர்கள். உங்க எஜமானருக்கு அறுபது நாழிகையும் தேவடியாள் வீட்டுக்குப் போவதற்குத்தான் கார் சரியாயிருக்கிறது. நாளைமுதல் காரை என் உத்திரவின்றி நீ யாருக்கும் ஓட்டக்கூடாது. எஜமானர் வேண்டுமானல் வேறு டாக்ஸி கார் ஒன்று வைத்துக்கொள்ளட்டும். அவருக்குத்தான் பணமும் தண்ணீரும் ஒன்றுயிற்றே! என் தம்பி ஊருக்குப் போகும் வரையில் நீ அவனுக்கே வண்டியை உபயோகப்படுத்தவேண்டும். தெரிந்ததா?'' என்று தன் மகத்தான அதிகாரத்தைக் காட்டிச் சட்டம் போட்டாள்.

இதைக் கேட்ட ட்ரைவருக்கு உள்ளம் கொதித்தது. உலகமெல்லாம் போற்றும் உத்தம ப்ரபுவாகிய அவர் மீதா இத்தகைய அபாண்டப் பழியைச் சுமத்திப் பேசுவது? சீச்சீ! இது சற்றும் அடுக்காது. அத்தகைய உத்தமரிடம் இத்தனை வருஷமாகப் பழகியுமா அவரது மாசற்ற குணம் தெரியவில்லை!''என்று கீர்வாணியின்மீதே வெறுப்பாகத் தோன்றியதால் "அம்மா! உங்கள் உத்தரவுப்படியே வண்டியை உங்கள் தம்பிக்கு ஓட்டுகிறேன். ஐயாவிடம் ஒரு பேச்சு கேட்காது செய்வது சரியில்லை. கேட்டுவிடுகிறேன். மகா உத்தமராகிய ஐயாவைப் பற்றி நீங்கள் கேவலமாகப் பேசுவது சற்றும் சரியே இல்லை''...என்று தானகக் கூறிவிட்டுச் சரேலென்று போனன்.

ட்ரைவரின் வார்த்தை அந்த அம்மாளுக்கு மிகவும் சுரீரென்று தைத்துப் பின்னும் கோபத்தை உண்டாக்கியது. தன் கணவனுக்கு ட்ரைவரும் உடந்தையோ! என்றுகூடத் தோன்றியது. மூத்தமகனும் அதற்கனுகூலமாகவே தாளம் போட்டான். காப்டன் வரப்போகும் வைபவத்தில் அவர்களுக்குத் தலைகால் தெரியவில்லை. அன்று வெகு நேரமாகியும் புண்ணிய மூர்த்தி வராததும், வீட்டில் ஜனங்கள் அவரைத் தேடிக்கொண்டு வருவதும் காண ஆத்திரம் கட்டுக்கடங்காது கரைபுரள வாரம்பித்தது. “வரட்டும் அவர்! என்னபாடு படுத்துகிறேன்” என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள்.


அன்று அவர் வந்ததும் தெரியவில்லை. போனதும் தெரியவில்லை. இவளுடைய சபதமும் ஈடேறவில்லை. ஏன்! ஆடம்பரமற்ற புண்ணிய மூர்த்தி தினப்படியிலேயே தன் வேலையுண்டு தானுண்டு என்றிருப்பவர், இன்று அவர் மனத்தில் போராடும் பரிதாபகரமான விஷயமும், கண் முன்பு தாண்டவமாடும் துக்ககரமான சம்பவமும் இளகிய அவர் நெஞ்சம் பொறுக்காது தவிப்பதால் ஆகாரத்தையே வெறுத்தார்.

காந்தாமணியின் பரிசுத்தம் அவ்வூர் அறிந்ததெனினும் ஈன குலத்தில் பிறந்த இழுக்கை மறைக்கமுடியுமா! பனையடியில் பால்குடித்த கதையைப்போல் புண்ணியமூர்த்தியின் நிலைமை உலாவத் தொடங்கியது. நிருபமாவின் பிறப்பு ரகஸ்யமறிந்த பிறகு அவருடைய பவித்திரமான இதயத்தில் முன்னிலும் அதிக மதிப்புடன் உயர்ந்த ஸ்தானத்தைக் கொடுத்துவிட்டதால் கலாசுந்தரியாகிய அவளது வாழ்க்கை விளக்கு படர்ந்தெரியாமல் சுடர்விட்டெரியவும் அவளை மாசுமருவு அணுகாதுக் காக்கவுமே அவர் மனது பறந்ததால் அதே நினைப்புடன் என்ன செய்யலாம் என்று அபாரமான யோசனையிலாழ்ந்துவிட்டார்.

அவர் வீட்டில் தங்காதுபோனதையும் முகம்வாட்டமடைந்திருப்பதையும் கவனித்த சுகுமாரன் பிதாவின்மீது அபாரமான வெறுப்பும் அருவருப்புங் கொண்டான். பிறகு காந்தாமணி இறந்த செய்தியை அறிந்த அவன், தாயாரிடம் ஓடிவந்து, “அம்மா! நமக்கு அதிர்ஷ்டகாலம் கிட்டிவிட்டது. அந்த படுபாவி தாசி காந்தாமணி இறந்து ஒழிந்தாளாம். அந்த கவலைதான் ஆசாமியை இப்படி ஆட்டிவைக்கிறது. இனிமேல் என்ன செய்து என்ன லாபம்! அவரைப்பிடித்து ஆட்டியபிசாசு துலைந்ததால் இனி அங்கு போகமாட்டார். மாமா வரும்போது இத்தகைய அவமானம் இல்லாதிருக்கும்” என்று மிகுந்த குதூகலத்துடன் கூறினான்.

இதுகேட்ட கீர்வாணியம்மாள் “என்ன! என்ன! நிஜமாகவா காந்தாமணி இறந்தாள்?...உண்மையாகவா! இப்போதும் அவர் பிணத்துடன் அழுதுகொண்டுதானிருக்கிறாரா? அபாடா! என்னுடைய முறையீட்டைக்கூட பகவான் நிராகரிப்பாரா? அவர் என் பங்கிலிருந்துதான் இத்தகைய மகோபகாரத்தைச்செய்தார். நாளைக்காலையில் காந்தன் வருகிறான். உன் காதலியும் வருகிறாள். நாம் செய்யவேண்டிய ஏற்பாடுகள் செய்தாயிற்று. மகாபரிசுத்தவானாகிய உன் மாமாவின் எதிரில் உன் தகப்பனார் தேவடியாள்வீடும் பவிஷுமாக எங்கே அல்லாடப்போகிறாரோ, என் மானம் போய்விடுமே என்கிற பயத்தினால் தவித்தேன். நல்லவேளையாக இந்த சந்தோஷச்செய்தி கிடைத்தது. துக்கத்தினால் புலம்பிக்கொண்டு இருந்தால், ஏதோ உடம்பு சரியில்லை என்று சாக்குசொல்லிவிடலாம்- என்று தாயும் மகனும் மகத்தான சந்தோஷத்துடன் பேசிக்கொண்டார்கள்.

அன்று சாயங்காலம் புண்ணியமூர்த்தி வெகு அன்போடு நிருபமாவை அழைத்துக்கொண்டு தன் வீட்டுவாசலில் காருடன் இறங்கியதை மேல் மாடியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த சிவகுமாரன் ஓடோடி கீழேவந்து பரிதாபப்பதுமைபோல் நிற்கும் நிருபமாவைப்பார்த்தான். அவனுடைய இளகிய மனது பாகாயுருகியது. "அழாதே நிருபமா! எல்லாம் ஊழ்வினையின்கூத்து. எது எப்படியிருப்பினும் நீ உயர்குலத்துப் பெண்மணி என்கிற ரகஸியத்தை அறிந்து நான் பரமானந்தமடைகிறேன். உன்னைப் பெற்ற தாயைவிட நூறுமடங்கு அதிகமான பாசத்துடன் வளர்த்த அற்புத பிம்பத்தை இழப்பதென்றால் விசனமாகத்தான் இருக்கும். இனி என்ன செய்வது? அழாதேம்மா!" என்று தன்னையும் மீறித்தேற்றினன்.



புண்ணியமூர்த்தி நிருபமாவைச் சமாதானம்செய்து உள்ளே அழைத்துவந்து, "கீர்வாணீ! கீர்வாணீ!" என்று கூப்பிட்டார். பரங்கிக் காயைப்போல் முகத்தை வைத்துக்கொண்டு கீர்வாணி ஓடிவந்தாள்.

நிருபமாநிற்பதையும். புண்யமூர்த்தி அவள் முதுகில் கையை வைத்துத் தட்டியவாறு சமாதானம் செய்வதையும் கண்டு ஆத்திரம் காலாவது அவதாரத்தைவிட அதிகமாகப் பீறிக் கொண்டுவந்தது, வெகு விரைப்பும் முறைப்புமாக நின்ருள்.

புண்:—நிருபமா ! இவள்தான் என்மனைவி. உனக்குத் தெரியுமோ! என்னவோ?...கிர்வாணீ !! நிருபமாவின் நாட்டியத்தின் மகிமையை நீ அறிந்திருக்கலாம். ஆனல் அவள் நம்போன்ற உயர்ந்த ஜாதியிலுதித்த உத்தமப்பெண்தான் என்பதை நீ அறிந்தால் மிகவும் சந்தோஷப்படுவாய். உனக்கு ஒரு பெண்குழந்தை பிறந்து இறந்தபோது நீ எத்தனைத் துயரமுற்றுப் பரிதபித்தாய்? அந்தக்குறையைத் தீர்ப்பதற்காகத் தான் பகவான் நீ சற்றும் எதிர்பாராத விதமாய் உனக்கு இந்த அற்புதக் குழந்தையைக் கொடுத்திருக்கிருர். திக்கற்ற இப் பரதேசிக் குழந்தையை இனி கனிகரத்துடன் நாம்தான் ஆதரிக்கவேண்டும். இவள் மகா பரிசுத் தாத்மா ! இவளை நீ கேவலமான தாசிமகள் என்று எண்ணி இருந்த எண்ணத்தை மாற்றிவிடு. இந்தா ! குழந்தை'' என்று அன்பு ததும்பவும், ச்வதந்திரத்துடனும் கூறினர்.

கிர்வாணியம்மாளின் எதிர்பார்ப்பும் எண்ணங்களும் அடியோடு அடித்துக்கொண்டு போய்விட்டன. தேவடியாள் பெண்ணையே, அதோடு நாட்டியக்காரியையே தனக்குப் பெண்ணுகவிருக்க சற்றும் அச்சமோ வெட்கமோ இல்லாது அழைத்து வந்த செய்கை அந்தம்மாளின் இதயத்தில் தீ போல் மூண்டது. இரண்டு கைகளையும் சேர்ந்தார்ப்போல் மோவாயில் பதித்தவாறு ஏதோ வியப்பிலும் வியப்பான மிருகத்தைப் பார்ப்பது போல் நிருபமாவை உற்று உற்றுப் பார்த்தாள்.

நிருபமா தேவதாசியின் மகள் என்ற எண்ணமே இதயத்தில் ஊறிப் போயிருப்பதால் அந்த அருவருப்புடன் அவளைப் பார்க்கிருளேயன்றித் தன் கணவன் சொல்லும் வார்த்தைக்ள் எதுவுமே காதில் விழவில்லை. அந்தம்மாளின் யோசனை இன்னும் அதீதமான முறையில் சென்று வேலை செய்யத் தொடங்கியது. அதாவது, தன் கணவனுக்கு பல வருஷங்களுக்கு முன்னுலேயே இத்தகைய வியாபாரம் இருந்திருக்குமோ ! அதனல் அவருடைய மகளாகவே இருக்குமோ ? அதனல்தான் இத்தகைய சப்பைக் கட்டு கட்டி அழைத்துவந்துவிட்டாரோ ! வெட்கம், மானம்கூட மறைந்து போய்விட்டதோ! என்றெல்லாம் தன்போக்காக யோசிக்கிருள். கணவனுக்குப் பதிலே சொல்லவில்லை.

மகா யூகசாலியும், த்யாகமூர்த்தியுமான புண்ணியமூர்த்திக்கு கீர்வாணியின் சந்தேகமும் தடுமாற்றமும் நன்ருக்த் தெரிந்துவிட்டன. முரட்டு மாட்டை மூக்காங்கயிற்றை மாட்டவிட்டுத்தான் பிடிக்கவேண்டுமென்பதால் அவர் ஒன்றுமே பதில் சொல்லவில்லை.

பெத்த தாயாகவே எண்ணியிருந்த தாயைப் பறிகொடுத்த துக்கமும் தனது பரதேசித்தனத்தின் பயங்கரமும் அந்தம்மாள் தன்னை இன்னமும் தாசி என்கிற மனோபாவத்துடன்தான் பார்க்கிருர்கள் என்பதையும் ஒரு நொடியிலறிந்ததும் நிருபமாவுக்கு ஏற்கெனவே கொந்தளிக்கும் துக்கம் பின்னும் பெரும் புயலாக மாறிவிட்டது.

ஒருவராலும் கட்டுப்படுத்த முடியாதபடி விக்கி விக்கி அழுதபடியே "டாக்டர்!"...என்று கத்தியவாறு அவர் கால்களில் வீழ்ந்து கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். டாக்டரின் உள்ளம் உருகியது. கண்ணீர் ஆருய் பெருக மனைவியை ஒரு முறைப்பு முறைத்துப் பார்த்தார். உடனே நிருபமாவைக் கவனித்தார், அக்குழந்தையின் தளிர்போன்ற இதயம் ஏற்கெனவே

துக்கத்தால் நலிந்திருந்ததால் இந்த அதிர்ச்சி தாங்காது மூர்ச்சையாகிக் கிடப்பதைக் கண்டு அவர் நெஞ்சம் பகீரென்றது. ஒரு சிறு குழந்தையைப் போல் நிருபமாவைத் தூக்கிக்கொண்டு தன்னுடைய தனியறைக்குச் சென்று "சிவகுமார்! ஒரு படுக்கையைத் தயார் செய்" என்று ஸ்வாதீனத் துடன் உத்திரவிட்டார்.

தகப்பனாரின் நிழல்போல் சகல அம்சங்களிலும் விளங்கும் சிவ குமாருக்குத் தன் தாயாரின் முரட்டுச் செய்கை கட்டோடு பிடிக்காமல் வெறுப்புண்டாகியது. தகப்பனாரின் கட்டளைப் படிக்கு படுக்கை தயார் செய்தான். உடனே டாக்டர் அவளை அப்படுக்கையில் கிடத்தி சரியான சிகிச்சைகளைச் செய்து பின்னர் தமது ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு நர்ஸை வரவழைத்து அவளை வெகு ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளும்படிக்கும், சிவகுமாரனையும் அடிக்கடி கவனித்துக்கொள்ளும்படிக்கும் கூறிவிட்டுத் தனது இதர வேலைகளைக் கவனிக்கச் சென்றார்.

இந்த செய்கையைக் கண்ட கீர்வாணியம்மாளும், சுகுமாரனும் தீயை மிதித்தவர்கள் போலானதோடு இதயமே வெடித்துவிடும்போலும் தோன்றியது. "தாசி தொலைந்ததோடு அவமானம் மறைந்ததென்று எண்ணிய தற்கு மாறாக 'பெருமாள் பெரிய பெருமாள் ஆகிய கதை" போல் அவ மானம் மட்டும் இன்றி ஜாதிக்கும் குலத்திற்குமே பெரும் அபவாதமும், சுற்றத்தார்கள் உற்றார்கள் முதலியவர்களால் கட்டும் காயிதாவும் நேர்ந்து விடக்கூடிய இழுக்கும், இளைப்பமுமாகவன்றோ ஆய்விட்டது. நாளைக் காலையில் மகா பரிசுத்தமான காந்தனும் லலிதாவும் வந்து இந்த தாசி மகளைக் கண்டால் என்ன நினைப்பார்கள்? அவர்களுக்கு என்ன பதில் சொல்வது?" என்கிற மகத்தான யோசனையும் அதிர்ச்சியும் உண்டாகிய வேகத்தில் உலகமே பூகம்பத்தில் ஆடுவதுபோல் தோன்றியது.

## 9

தான்தான் வீட்டின் அதிகாரி, தனது அதிகார தோரணையைச் செலுத்தி நடக்கவேண்டும் என்கிற எண்ணமே புண்ணியமூர்த்திக்குக் கிடையாது. அவர் தொழில் நடத்த ஆரம்பித்த நாள்முதல் பரோபகாரத் திற்கே தான் பிறந்திருப்பதாயும் அதற்குத்தான் தன் வாழ்நாளை அர்ப்ப பணம் செய்யவேண்டும் என்றும் அந்த உத்க்ருஷ்டமான தொண்டுதான் பகவானின் திருவுள்ளத்திற்கு உகப்பானது என்ற நம்பிக்கையும் அவர் இதயத்தில் ஊறிப்போய் சதா அந்த திவ்ய மந்திரமே இதய ஒலியாக ஒலித்துக்கொண்டிருக்கும் உத்தமராகையால் தனக்கு மிகவும் எதிராகத் தனது மனைவி நடந்தபோதிலும் அவர் அதை அதிகமாகப்பாராட்டவில்லை யெனினும் மனைவியின் மூடத்தனத்தின் செய்கையையும் ஈவிரக்கமற்ற நெஞ்சின் அழுத்தத்தையும் கண்டு அவரையுமீறிக் கோபமே பொங்கியது. அத்தகைய ஜடஸ்வபாவமுள்ள மனைவியைக்கண்டித்துத் திருத்தவும் அவர் மனது துணிந்தது.

நிருபமாவின் பொறுப்பு பூராவும் தன் தலைமீதே விழுந்துவிட்டதால் அவருக்கு முன்னிலும் அதிகரித்த வாத்ஸல்யமும் அன்பும் உண்டாகியது. நிருபமாவுக்கு நன்றாகத்தெளிந்ததும் தான் ஓர் அரசிளங்குமரியைப் போன்ற அந்தஸ்துடன் படுத்திருப்பதையும் சிரித்த முகத்துடன் நர்ஸ் உட்கார்ந்திருப்பதையும் கண்டு அவள் உள்ளம் ஒருபுறம் பூரிக்கின்றது, ஒருபுறம் விசனம் கொந்தளிக்கின்றது. மற்றொருபுறம் கீர்வாணியின் பார்வையில் ஜொலித்த கோபமும் வெறுப்பும் அலக்ஷியமும் இதயத்தில் சுருக்கெனத்தைத்து ஆழமாகப்பதிந்திருந்ததால் அதை நினைக்கும்போதே பயமும் நடுக்கலும் உண்டாயின.

இதய ஒலி

'மகாபுனிதமூர்த்தியான டாக்டருக்கு நம்மால் என்ன கஷ்டம் நேருமோ!' என்கிற எண்ணமே அச்சிறுமியின் உள்ளத்தை வாட்டுகிறது. தன்னெதிரிலேயே சிவகுமாரன் மலர்ந்தமுகத்துடனும் அன்பும் கனிவும் நிறைந்தபார்வையுடனும் உட்கார்ந்திருப்பதை நோக்கவியப்பு பின்னும் பன்மடங்காகப்பெருகியது.

தனக்கு இத்தகைய மரியாதையும் பதவியும் தகுமா! என்று ஒரு க்ஷணநேரம் நினைத்தாள். தானும் இவர்களைப்போன்ற உயர்ந்த ஜாதிப் பெண்தானே! என்பது நினைவுக்குவந்ததும் அவள் மனத்தில்மட்டும் ஏதோ ஒருமாதிரியான உணர்ச்சி பரவி கூசச் செய்தது.

அடுத்த நிமிடமே "ஐயோ! என் தாய் இத்தனை நேரம் எரிந்து சாம்பலாகி இருப்பாளா? எரிந்துகொண்டிருப்பாளா? என்ற பயங்கரமும் தாங்க முடியாத துக்கமும் குபீர் என்று பிறிக்கொண்டு வந்ததால் மீண்டும் விக்கி விக்கி அழுதவாறு குப்புறப் படுத்தாள்.

அதே சமயம் சிவகுமார் தகப்பனர் சொல்லியிருந்தபடி நிருபமாவுக்கு ஒருமருந்தைக் கொட்டிக் கொடுக்க வந்தான். நிருபமா மிக்க விசனத்துடன் "ஐயோ! என் தாயார் பற்றி எரிந்துகொண்டிருக்கையில் எனக்குப் பால் கூட வேண்டுமா! உற்றநக்த ஒருமாதம் பங்கைத்தீர்ந்த்துப் பத்துநாள் என் பார்களே! பெற்ற அன்னையைப் பறிகொடுத்த எனக்கு ஒருமணி நேரத்திற்குள்ளாகவா 'பால் குடிக்க மனம்வரும்.? வேண்டாம்! வேண்டாம். தயவு செய்து என்னைவிட்டுவிடுங்கள்" என்று கெஞ்சினுள். அவள் கண்ணீரை நிறுத்த அவளால் முடியவில்லை.

"நிருபமா! உன் மனத் தவிப்பும் துக்கத்தின் எல்லையும் எனக்குத் தெரியாதா! சற்றுமுன் நீ இருந்த நிலைமையைப் பார்த்தால் அப்பாவே பயந்துவிட்டார். என்ன செய்வது? இது பாலில்லை. மருந்து கலந்திருப்பதால் தோஷமில்லை. சாப்பிடம்மா! இதைக் குடித்தால்தான் மறுபடியும் மயக்கம் வராது" என்று வெகு வாஞ்சையுடன் கூறியபடியே அவள் பக்கத்திலேயே நாற்காலியில் உட்கார்ந்து கெஞ்சினன்.

பகிரங்கமாய் புண்யமூர்த்தியை நேரில்கேட்டு சண்டைபோட்டு பெரிய ரகளை செய்யவேண்டுமென்று நினைக்கிறுர்களே யன்றி அதற்குமட்டும் கீர்வாணிக்கு அவ்வளவு சடுதியில் மனது துணியவில்லை. பொங்கி யெழும் பொறுமைத் தீயின் ஜ்வாலை கண்களில் பறக்க சுகுமாரன் தடதடவென்று மாடிக்கு ஓடினன். அவன் மகா கோபக்காரன். என்ன கூறி என்ன ரகளையை விளைவித்து விடுவானே என்கிற பயம் கீர்வாணிக்கு உள்ளூற வாட்டியதால் "சுகுமார்! சுகுமார்!... இங்குவா... போகாதே!" என்று கூறியபடியே பின்னல் ஓடினள்.

அதற்குள் சுகுமார் மாடியில் நிருபமா படுத்திருக்கும் அறையின் வாசற்படியருகில் வந்துவிட்டான். சிவகுமாரன் பாலைவைத்துக்கொண்டு கெஞ்சுவதும் நிருபமா அழுவதும், நர்ஸ் அனுதாபப்படுவதுமான காக்ஷியைக்கண்டு சுகுமாரனின் கோபத்தில் இன்னும் டப்பாவுடன் மண்ணெண்ணெய்யையே ஊற்றியதுபோலாய்விட்டது. கண்களில் தீப்பொறிபறக்க உதடுதுடிக்க, தேகம் படபடக்க, மார்பு தடதடவென்று அடிக்க, வெயர்வை வெள்ளம் பொங்க, ரௌத்திராகார பிம்பமாக நிற்கிறுன். இன்னது செய்வது என்று தோன்றுது ஒருக்ஷணம் அவன் மனம் தவித்தது.

உடனே "தூத்தூ...தேவடியாள் சிறுக்கிக்குத் தொண்டுசெய்யும் வெட்கக்கேட்டைச் சகிக்கமுடியவில்லை." என்று ஒரு கர்ஜனைசெய்து காறியுமிழ்ந்தான். அந்த ஆவேச ஒலி அவ்வறைபூராவும் பரவி எதிரொலி உண்டாக்கியது.

## காரணப் பெயராய்விட்டது.

"கோனஷ்டை"

ஜகன்மோகினியின் பொங்கல் மலரை வாசிக்கும் பொழுது முதலில் இடுகுறிப்பெயராயிருந்த ஜகன்மோகினி யென்பது இப்பொழுது ஒரு காரணப் பெயராய்விட்டது தான் மனதில் முக்கியமாய் தோன்றுகிறது.

---

## மற்றவர்களுக்கும்...உணர்வளிக்கும்

சுவாமி சுத்தானந்தபாரதி

தமிழ்நாட்டில் எத்தனையோ மலர்கள் வெளிவருகின்றன. சில கதை மலராகவேயிருக்கின்றன. சில படங்களால் பொலிகின்றன. சில கட்டுரைக் கதம்பமாயிருக்கின்றன. சில படிக்கவே முடியாதபடி குப்பை கூழங்களையெல்லாம் போட்டு நிரப்பி, ஜோரான சட்டை போட்டு ஜிலுஜிலுப்பாக வருகின்றன. நமது மலர்களில் உயர்ந்த அத்யாத்ம விஷயங்களோ, உலகை ஆளும் சிறந்த விக்ஞான விஷயங்களோ, உயர்ந்த ஆதர்சங்களைத்தரும் அனுபவநிகழ்ச்சிகளோ அதிக மில்லை. இந்த நிலைமையைத் தீர்க்க நமது 'மோகினி' பொங்கல் - புன்னகையுடன் வசந்த மலர்கள் சூடி வந்தாள்...படங்கள், கதைகள், கட்டுரைகள், வரலாறுகள், பெண்ணுலகத்திற்கு நல்லுரைகள், ஆண் பெண் வாழ்விற்கு உன்னதமான ஆதர்சங்கள், நமது ஆத்யாத்மச் செல்வத்தினின்றெடுத்த அறிவுமணிகள், பக்திரசக் கட்டுரைகள், பெருங் கதைகள், ஆழ்ந்த நகைச்சுவைகள் எல்லாம் பொதிந்து மோகினி ஒரு கலைச்செல்வியாக அணிநடை குலுங்குகிருள். இம் மலர் பெண்ணுலகிற்கே பெருமையளிக்கும். மற்றவர்களுக்கும் 'மலர் இந்தமாதிரி பயனுள்ளதாயிருக்கவேண்டும்' என்ற உணர்வளிக்கும்...ஜகன்மோகினி வாழ்க.

---

## பொருத்தமான பெயர்

ஸ்ரீமதி R. S. சுபலக்ஷ்மி, B.A., L.T.,

"ஜகன்மோகினி" ஆண்டுமலர் வரப்பெற்றேன். பொருத்தமான பெயர். ஜகத்தையே மோகிப்பித்துப் பரவசப்படுத்துகிறதல்லவா?

சரீர சக்தி, அறிவு சக்தி, ஆத்மசக்தி இவற்றை வளர்ப்பதற்கு அனுகூலமாக அறிவும் ஆற்றலும் மிகுந்த அநேகப் பெரியோர்களால் எழுதப்பட்ட அரிய விஷயங்களை மோகினியின் அன்பர்கள் படிப்பதால், அவர்கள் பல துறைகளிலும் அபிவிருத்தியடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

## மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்

ஸ்ரீமதி "குமுதினி"

மலர் மிகவும் நன்றாக இருக்கிறது என்பது மிகக்குறைவாக உரைப்பதாகும். இவ்வளவு நல்ல பல அறிவாளர்களின் சரக்கை சேகரித்து எங்களுக்கெல்லாம் வாசிக்கக் கொடுத்ததுபற்றி மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

## சிறப்பை உணர்த்த வார்த்தைகளே கிடைக்கவில்லை

ஸ்ரீமதி "குகப்ரியை"

எதிர்பார்த்ததை விடப் பல மடங்கு அழகும், பொலிவும் தோன்ற விருந்தளித்தாள். கலைவிருந்து கவிதைவிருந்து எல்லாம் கூடி, என்னை வேறொரு அற்புத உலகிற்கே அழைத்துச்சென்றதுபோல உணர்ந்தேன். ஆனால் என் சந்தோஷத்தையும் மலரின் சிறப்பையும் உள்ளபடி உணர்த்தத் தகுந்த வார்த்தைகளே கிடைக்கவில்லை.

நந்தவனத்தில் மலர்கள் காலப்பிரகாரமும், ருதுப்பிரகாரமும்தான் மலர்கின்றன. ஆனால் கற்பனை நந்தவனத்தில் நினைத்தபோதெல்லாம் மலர்கள் உதயமாகின்றன, கலைவாணியின் அருளால்.






தமிழ் மலர்ச் சோலையில் அரும் பணிபுரியும் அங்கனை மணிகள் சிலர் சமர்ப்பிக்கும் புத்தப் புதிய மலர்கள் சிலவற்றை அவ்வப் பொழுது "நந்தவனம்" உங்களுக்கு அழகிய ரூபத்தில், கண்ணைக் கவரும் படங்களுடன் அளிக்கும்.

முதல் பகுதி வெளியாகும் தேதி, விலை, எழுத்தாளர்களின் விவரங்கள் யாவும் பின்னர் அறிவிக்கப்படும்.

## அடுத்த இதழில் கவனிக்கவும்

**நினைவிருக்கட்டும்**